Registered No. M. 878.

# பூர்ணசந்திரோதயம்.

## A Tamil Monthly Journal

***Devoted to Theosophy, Religion, Science, Art and Civilization***


| | | |
|---|---|---|
| தொகுதி 5 | 1915ஆம் ஃபிப்ரவரிமீ 15உ<br>ஆனந்தஆம் மாசிமீ 4உ | பகுதி 10 |


அ. ரங்கஸ்வாமி ஐயர், B.A, B.L., F.T. S, பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ 2௦ தனிப்பிரதி அணா 4.

மதுரை:

விவேகபாநு அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

Copy Right Reserved.

பொருளடக்கம்.

# CONTENTS.


பக்கம்.

1. தற்கால நிலைமை—அ. ரங்கஸ்வாமி ஐயர். 361
From the Editor—A. Rangaswamy Iyer.

2. வருங்கால லக்ஷ்யங்கள்—ஸேவாநந்தன். 369
Ideals of the Future—Sevananda.

3. ஹரிஹரர்களின் அத்வைத பாவம் P. A. கிருஷ்ணன். 373
Oneness of Hari & Hara—P. A. Krishnan.

4. ஸத்யம்—பாலகிருஷ்ணன். 375
Truth—Balakrishnan.

5. ஜாதி வேற்றுமை ஏற்பட்ட விதம்—M. ஸ்வாமிநாதையர்.
Caste System—M. Swaminatha Iyer. 377

6. உதயதிசை நக்ஷத்ர ஸங்கம்.
Order of the Star in the East—B. S. R.

7. சமாசாரம்—ஸேவாநந்தர்.
News. „ Sevananda. 388

8. சிறுவர்க்குரிய விஷயம்—வஸந்தாநந்தர்.
Children's Corner—Vasanthananda. 393

9. தியானக்கிரம விஷயம்—K. S. இராமசந்திர ஐயர். 397
Meditations—K. S. Ramachandrier.


---


## *Ready for Sale.*

*The English Translations of:—*

**Thirty Minor Upanishads Rs. 3-8-0**

**Laghu Yoga Vasishta Rs. 2-0-0**

**Professor Bergson & the Hindu Vedanta. } Rs. 0-4-0**

**without postage.**

The above Upanishads, except one or two have never before been published in a book-form. Please apply to:—

**K. Narayanasamy Iyer Esq.**

Theosophical Society, Adyar, Madras.

ॐ

सत्यात् नास्ति परो धर्मः

351

# பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 5 | 1915௵ பிப்ரவரி௴ 15௳ ஆனந்த௵ மாசி௴ 4௳ | பகுதி 10

## தற்கால நிலைமை.

சென்ற ௵ டிசம்பர் மாதம் அடையாற்றில் பிரஹ்மக்ஞான சபையின் 39-வது வருஷக் கூட்டம் வெகு விமர்சையாய்க் கொண்டாடப்பட்டது. ஐரோப்பிய யுத்தத்தினால் ஐரோப்பிய தேசங்களிலிருந்து முன் வருஷங்களில் நேர்ந்ததுபோல் அநேக பிரதிநிதிகள் கூடவில்லை. ஆனால் இந்தியாவின் பல மாகாணங்களிலிருந்து பலர் வந்தனர். தென் பிராந்தியமாகிய இந்த இராஜதானியிலிருந்து அநேகர் விஜயம் செய்திருந்தனர். பேஹார் (Behar), ஆக்ரா, அயோத்தியா என்ற ஐக்கியமாகாணங்கள், மத்தியமாகாணங்கள், இராஜஸ்தானம், சிந்து முதலிய பிரதேசங்களிலிருந்தும் பிரதிநிதிகள் வந்தனர். பிரஹ்மக்ஞான சபையின் இந்தியன் ஸெக்ஷன் சென்ற டிசம்பர் மாதம் 23௳ கூடினது. ஸ்ரீமான் ஜீனராஜதாஸர் அக்கிராஸனம் வகித்தார். இந்தியன் ஸெக்ஷன் தலைமைக் காரியதரிசியாகிய ஸ்ரீமான் இக்பல் நாராயண குர்து என்பவர் சென்றவருஷத்திய ரிப்போர்ட்டை வாசித்தனர்.

*
* *

அந்த ரிப்போர்ட்டில் பிரஹ்மக்ஞான சபையினிடத்தில் சிலர் வ[illegible]ந்த துவேஷத்தையும், அதற்குக் கெடுதலை யுண்டாக்கவேண்டு

மென்று கருதிச் செய்த செயல்களையும் எடுத்துக் காட்டி, அவைகளுக்கு மாறுபாடாய் இச்சபையானது அபிவிருத்தியை அடைந்ததுமன்றி இச்சபையின் தலைமை வகித்த மாது ஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையார் மறுபடியும்1914ம் ௵ ஜூன்மாதத்தில் இன்னும் 7 வருஷகாலத்திற்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படும்போது இந்தியாவில் 4613 மெம்பர்கள் அவர்களுக்கு அநுகூலமாயும் 70 மெம்பர்கள் மட்டும் அவர்களுக்கு விரோதமாயும் வோட்டு (vote) கொடுத்தார்களென்றும் எடுத்துக் கூறினர்.

* * *

தவிரவும் சென்ற 1913—1914௵த்தில் பலவிடங்களில் சரியான ஊக்கத்துடன் 377கிளைச்சங்கங்கள் உழைத்து வந்தன. அதற்கு முந்திய வருஷக் கடைசியிலோ அவ்விதமாக உழைத்துவந்த சங்கங்கள் 360 தான். 1913-1914ம் ௵த்தில் 17 புதிய கிளைச்சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டு, 3 கிளைச்சங்கங்கள் உயிரிழந்தனபோல் வேலை செய்யாமலிருந்து விட்டன. ஆகையால் வருஷக் கடைசியில் 374 கிளைச்சங்கங்கள் சரியான நிலைமையில் இருந்தன. பிரஹ்மஞான கிரந்தங்களைப் படித்து வரும் Centres என்ற சிறிய சபைகள் முன் வருஷம் 86 ஆகவிருந்து 88ஆக அதிகரித்தன. கிளைச்சங்கங்களைப் பலத்துடன் கூடினவைகளாயும் சேரும் மெம்பர்களை உற்சாகமுடையவர்களாயும் உறுதியுடன் கூடினவர்களாயும் செய்ய வேண்டியது அவசியமாயிருக்கிறது. அதற்காக இந்தியன் ஸெக்ஷன் நிர்வாக சபையோர் சில நூதன ஏற்பாடுகளை அப்பியாஸத்திற்குக்கொண்டுவர ஆலோசித்துக்கொண்டிருக்கிறார்கள். நமது சங்கத்தின் மெம்பர்களுடைய ஊக்கமானது எவ்வளவு திருப்திகரமாயிருக்கவேண்டுமோ அவ்வளவு திருப்தியான நிலைமையில் இல்லையென்பதை ரூபிக்க பலவருஷங்களிலுள்ள மெம்பர்களின் சங்கியையும் சங்கத்தில் சேர்ந்த அல்லது விலகின மெம்பர்களின் சங்கியையுமே போதுமான சாக்ஷ்யமாயிருக்கிறது. 1909-1910ம் வருஷத்தின் ஆரம்பத்தில் சங்கத்தில் சரியான பற்றுதலையுடைய மெம்பர்களின் சங்கியை 4858. சென்ற 5வருஷங்களில் 3678 மெம்பர்கள் நூதனமாக சங்கத்தில் சேர்ந்திருக்கிறார்கள், ஆனாலும் 1913-1914ம்வருஷத்தின் கடைசியாகிய 1914௵ செப்டம்பர்மீ 30உயில் சிரத்தை

யுடன் கூடின மெம்பர்கள் 5747 தான் இருந்தார்கள். அதாவது சென்ற 5 வருஷங்களில் மெம்பர்கள் சங்கியையின் அபிவிருத்தி 788 ஆகிறது. இந்த 5 வருஷங்களில் இறந்துபோன மெம்பர்களை விலக்கிப்பார்க்குங்கால், பெரும்பான்மை வருஷாந்திர சந்தா செலுத்தாமல் சென்ற 5 வருஷங்களில் விலகின மெம்பர்கள் 2,500 ஆகிறார்கள். இவ்வித மெம்பர்கள் நஷ்டம் சராசரி வருஷம் 1க்கு 500 ஆகிறது. ஒவ்வொரு வருஷமும் 100 மெம்பர்கள் நூதனமாகச் சேர்ந்தால் 70 மெம்பர்கள் வருஷ சந்தா செலுத்தாத காரணத்தைப்பற்றி விலக்கப்படுகிறார்கள். வரவில் முக்கால்பாகம் நஷ்டமாகிறது. இதனால் வெளிப்படுத்தப்படும் நிலைமை திருப்தியானதன்று. இந்தக் குறைவை நிவிர்த்தி செய்வதற்குத் தக்க முயற்சிகளைச் செய்யவேண்டியதவசியம்.

* * *

1912-1913-ம் வருஷத்தில் 1071 மெம்பர்கள் நூதனமாகச் சேர்ந்திருக்க, சென்ற 1913-1914-ம் வருஷத்தில் நூதன மெம்பர்களின் சங்கியை 771. முன் வருஷக் கடைசியில் 5890 ஊக்கமுள்ள மெம்பர்களிருந்திருக்க, சென்ற 1914 வருஷம் செப்டம்பர் மாதம் 30உயில் அவ்வித மெம்பர்களின் கணக்கு 5747 ஆகிறது. வருஷாந்தர சந்தாத்தொகையின் மொத்தம் சென்ற 1912-1913ம் வருஷத்தில் ரூ. 11,706 ஆகவிருக்க, சென்ற வருஷமாகிய 1913-1914-ல் ரூ. 14023 ஆகவிருக்கிறது. இவ்விதமாய் வரும்படி கொஞ்சம் அதிகரித்திருப்பினும் அடியிற் கண்ட விஷயத்தில் மிக்க அதிருப்தி உண்டாக ஹேது ஏற்படுகிறது. சென்ற 5 வருஷங்களில் மெம்பர்களிடமிருந்து வசூலாகவேண்டிய வருஷசந்தா மொத்தம் ரூ. 68,514ல் ரூ 44346 மட்டும் வசூல் செய்யப்பட்டு மீதம் ரூ. 24145 வசூல் செய்யப்படாமல் நின்றுவிட்டது. ஆகையால் 3-ல் 1-பாகம் வசூலாகக் கூடாமலிருப்பதுபற்றி நாம் மிகவும் விசனிக்கிறோம்.

* * *

பாக்கியாயிருக்கும் இப்பெருந் தொகையை வசூலிக்கும்பொருட்டு கடிதங்கள் எழுதுவதில் வீணான தபாற்செலவும் காலவ்யயமும் ஏற்படுகின்றன. இதையுத்தேசித்து இந்தியன் ஸெக்ஷன் தலைமைக் காரியதரிசியவர்கள் நிர்வாஹ ஸபையாருடைய அநுமதியின் மேல்,

பலவருஷங்களாக பாக்கி வைத்துக்கொண்டிருப்பவர்களை, 1915-வரு ஸெப்டம்பர்மீ வரை மட்டும் சென்ற இரண்டுவருஷ சந்தாவாகிய ரூ 6மட்டும் அவர்களிடம் வசூலித்துநமது பிரஹ்மக்ஞானசபையில் திரும்பச் சேர்த்துக்கொண்டு, மீதியைத் தள்ளுபடி செய்வதாகத் தீர்மானித்திருக்கின்றனர். இச்சகாயம் நாளிதுவரு ஸெப்டம்பர்மீ த்திற்குப் பிறகு பாக்கிக்காரர்கள் அடையமுடியாது. எல்லாக் கிளைச்சங்கக் காரியதரிசிகளும் இச்செய்தியை பாக்கிதார்களுக்குத் தெரிவித்து, பாக்கியை வசூலித் தனுப்பும்படி வேண்டப்படுகிறார் கள். கிளைச்சங்கங்களில் சேராத அங்கத்தினர்கள் ரூ 8 அனுப்ப வேண்டும். "ஜெனரல் ஸெக்ரிடரியவர்கள், தியஸாபிகல் ஸொஸைட்டீ, இந்தியன் ஸெக்ஷன், காசி" என்ற விலாசத்திற்குப் பணம் அனுப்பப்படவேண்டும்.

***

சென்ற மாசம் 20-உயில் சென்னை அடையாற்றிலிருந்து Mr. J. I. வெட்ஜவுட் என்பவர் மதுரைக்கு வந்து அன்று மாலையில் ஸேதுபதி ஹைஸ்கூலில் பிரஹ்மக்ஞான சபையின் முயற்சியைக் குறித்து ஒரு உபந்நியாஸம் செய்தும், மறுநாள் மாலையில் அதே இடத்தில் நாம் இப்புவியில் ஏன் அவதரித்திருக்கின்றனம் என்ற கேள்விக்கு பிரஹ்மக்ஞானத்தின் மூலமாய் நாம் எம்மறுமொழியைப் பெறலாம் என்ற விஷயத்தைப்பற்றி உபந்நியஸித்தும், மூன்றும் நாள் மாலை அதேஇடத்தில் குப்தவித்தையையும் மனிதனின் விகாஸ முறையையும்பற்றி உபந்நியாசமும் செய்தார். சென்றமீ 23உ காலையில் உதயதிசை நக்ஷத்திர சங்கத்தின் முன்னர் அச்சங்கத்தின் விஷயங்களைக் குறித்து ஒரு உபந்நியாஸம் செய்தார். அவர் மதுரையில் செய்த உபந்நியாஸங்கள் நிதானத்துடனும் ஆழ்ந்த யோசனையுடனும் செய்யப்பட்டவைகளாயும் அவைகள் கேட்டவர்களுக்கு ஒரு ஊக்கத்தைக் கொடுக்கத் தக்கவைகளாயு மிருந்தன.

***

இப்பொழுது நிகழ்ந்து வருகிற ஐரோப்பிய யுத்தத்தில் ஆங்கிலேயர்களும் பிரான்சுக்காரர்களும் ஜெர்மானியரை மேற்புறத்தில் எதிர்க்க, ருஷியர்கள் அஜ்ஜெர்மானியரைக் கீழ்புறத்தில்தாக்கிக்கொ

ண்டுவருகிறார்கள். ருஷிய ஸைந்யமானது போரில் ஊக்கத்தோடும் விடாமுயற்சியோடும் சண்டை செய்வதற்குத் தகுதியாயிருக்கும் வண்ணம் அந்த ஸைந்யத்தை யுத்தஸன்னத்தமாய் ஒருங்கு சேரக் கூட்டின காலமாகிய (time of mobilisation) சென்ற ஜூலை மீ 11 உ ருஷிய ராஜாங்கத்தாரால் ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அந்த உத்தரவால் ருஷியர்களில் சாதாரண ஜனங்கள் உபயோகித்துவந்த 'வோட்கா' என்ற சாராயத்தின் விற்பனையானது தடுக்கப்பட்டது. அந்த உத்தரவானது ஒரு மாசகாலம் ஊர்ஜிதத்திலிருந்த பிறகு யுத்தம் முடியும்வரை அது ஆசரணையில் இருக்கத் தக்கதென்று இராஜாங்கத்தாரால் ஆக்ஞாபிக்கப்பட்டது. ஆகையால் இவ்விதமாக ருஷியாவில் சாதாரண ஜனங்களுக்கு சென்ற ஆறுமாசகாலமாய் மேற்சொல்லிய சாராயத்தின் விற்பனையானது தடுக்கப்பட்டிருக்கிறது. இவ்விதமான உத்தரவானது பிரசுரிக்கப்பட்ட காலத்தில், குடிமுதலிய லாகிரிவஸ்துக்களை உபயோகித்த ஜனங்களை ராஜாங்க உத்தரவின் மூலமாய் 'குடி' என்றகெட்ட அப்பியாஸத்தினின்றும் நல்வழிப்படுத்தல் அஸாத்தியமானதென்று சிலர் பிரஸ்தாபித்தார்கள்.

* * *

சென்ற 6 மாத காலங்களாக ருஷியாவில் நிகழ்ந்த வர்த்தமானங்களால் ராஜாங்க முறையால் ஜனங்களை நல்வழிப்படுத்தலும் ஸாத்தியமென்றே புலப்படுகிறது. 1913-ம் வருஷத்தில் ருஷியாவில் ஜனங்களுடைய சிக்கனத்தால் 340 லக்ஷம் ரூபில் (ஓர் ருஷிய நாணயம்) மீதம் செய்யப்பட்டது. சென்ற வருஷ ஜூலை மீ 1 உயில் 'வோட்கா' என்ற சாராயம் விற்கப்படத்தக்கதல்ல என்று ஆக்ஞாபனம் செய்யப்பட்ட உத்தரவின் மூலமாய் ருஷிய ஜனங்கள், அர்த்த நாசத்தை உண்டுபண்ணுகிற குடியாகிய கெட்ட அப்பியாஸத்தினின்றும் விடுவிக்கப்பட்டு 840 லக்ஷம் ரூபில் மிச்சம் பிடித்தார்கள். அக்னியோடு புகை கலந்திருப்பதுபோல இந்த மகத்தான யுத்தத்தினின்றும் உற்பத்தியான பல கெடுதல்களோடு கலந்திருக்கும் நன்மைகளில் ருஷிய ஜனங்களைக் குடிவெறியினின்றும் விலக்கி, மேற்கூறிய ருஷிய ராஜாங்க உத்தரவும் ஒரு நன்மையாக விளங்குகின்றது.

ருஷியாவில் இவ்விதம் சுலபமாக 'குடி' என்ற துரப்பியாசமானது குறைக்கப்பட்டது சாத்தியமாயிருப்பின், தத்தம் கொள்கைகளால் குடியானது வெறுக்கத் தக்கதென்று வற்புறுத்திச் சொல்லும் மதங்களை அநுசரிக்கிற இந்துக்களாலும் முகம்மதியர்களாலும் பெரும்பான்மை வாசம் செய்யப்பட்ட இந்த இந்திய பூமியிலும் குடி வெறியை அகற்றுவது சாத்தியமானதென்றே சொல்லத்தகும். அதற்குத் தக்கவாறு நமது ராஜாங்கத்தின் உதவியை அடைய நாம் முயலவேண்டும். குடி வெறியைக் குறைக்கத்தக்க முயற்சிகளை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று நாம் வற்புறுத்த வேண்டியது அவசியம்.

***

கனம் V. S. ஸ்ரீநிவாஸசாஸ்திரியாரால் சென்னை சட்ட நிருபண ஸபையில் பிரேரேபிக்கப்பட்ட ருதுமதிகளின் விவாகத்தைப்பற்றிய மசோதா சட்டமானது பலபல இடங்களில் ஜனஸமூகங்களால் ஆராய்ந்து பார்க்கப்பட்டு சிலரால் அங்கீகரிக்கப் பட்டும் சிலரால் கண்டனம் செய்யப்பட்டும் வருகின்றது. அந்தச் சட்டம் ஊர்ஜிதத்திற்கு வந்தபிறகு, எல்லாக்கன்னிகைகளுக்கும்ருதுவானபிறகுதான் விவாகம் செய்யவேண்டி வருமென்று சிலர் தப்பாகக் கிரஹித்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படியல்ல. ருதுமதிகளின் விவாகமும் விவாகத்தின் குணங்களை சட்டப்பிரகாரம் அடையத்தக்க ஒருவிவாகமே என்று சொல்லவந்ததே யல்லாது, பெண்கள் ருதுவாவதற்கு முன் அவர்கள் விவாகத்தை முடிக்கிற தற்காலத்திய வழக்கத்தை மாற்றவருகிற சட்டமல்ல.

***

நம்முடைய பூர்வீக பிரமாணங்களைப் பரிசோதித்துப்பார்ப்பின் அதே தீர்மானத்திற்கு வரத்தக்கதா யிருக்கும். அவைகளை விவரமாய் இவ்விடத்தில் கூறுதல் சாத்தியமில்லை. எல்லாப் பிரமாணங்களிலும், தலைமையானது சுருதியே. பூர்வகாலத்தில் ருதுமதிகளின் விவாகமே பெரும்பான்மையாக ஜனங்களால் கைக்கொள்ளப் பட்டதென்று தீர்மானிக்கத்தகும். விவாக காலத்தில் ஆதிகாலந் தொடங்கி நாளிதுவரையில் வதூவரர்களால் உச்சரிக்கப்படும்

வேத மந்த்ரங்களே அதை ருசுப்படுத்தக் கூடியவைகளா யிருக்கின்றன. ருதுவாகாத வதுவால் அம்மந்த்ரங்கள் உச்சரிக்கக் கூடியவைகளல்ல. தவிரவும் வரன் வதுவைப் பார்த்துச் சொல்லுகிற மந்த்ரங்களில் ஒன்று:—'ஸோமன் முதலில் உன்னை அறிந்தான். ஸோமன் உன்னைக் கந்தர்வனுக்குக் கொடுத்தான். கந்தர்வன் உன்னை அக்கினிக்குக் கொடுத்தான். அக்கினி உன்னை சம்பத்துடனும் சந்தானத்துடனும் எனக்குக் கொடுத்தான்'. பெண் ருதுவான பிறகு அக்கினியின் ஆளுகைக்குள் வருகிறபடியால் மேற்சொல்லிய வேதமந்த்ரங்களை விவாகக் கிரியையில் உபயோகிக்க ஆரம்பித்த காலத்தில் ருதுமதியின் விவாகம் வேத ஸம்மதமாகவே யிருந்ததென்று வெளியாகிறது.

* * *

சுருதிக்கு அடுத்த கீழ்ப்பிரமாணங்களாகிய ஸ்மிருதிகளில் சூத்திர ரூபமாகிய கிருஹ்ய சூத்திரங்களிலும் தர்ம சூத்திரங்களிலும் பெரும்பான்மையான கிரந்தங்கள் ருதுமதிகள் விவாகத்திற்கு அருகர்கள் என்று கூறவில்லை. அவர்களுடைய வசனங்களிலிருந்து அவ்விவாகம் அசாஸ்திரீய மல்லவென்று ஊகிக்கத்தக்கது. மேற்சொல்லிய சூத்திர காலத்திற்குப் பிறகு பெரும்பான்மையாக பிரசாரத்திற்கு வந்திருக்கும் சுலோகரூபமான ஸ்மிருதிகளில் முக்கியமான மநு முதலியவைகளில்பெண்களின் விவாகம் அவர்களுக்கு 12வயது ஆகுமுன்னர் செய்யத்தக்கதென்றும் 8வயதுக்குக்கீழ் செய்யத்தகாதென்றும் 12 வயதுக்குள் செய்யத்தவறினால் ருதுவாகி 3 வருஷத்துக்குள் விவாகம் செய்யலாமென்றும் அதுவும் தவறினால் கன்னிகையே தன் புருஷனை வரித்துக் கொள்ளலாமென்றும் கூறப்பட்டிருக்கிறது. இவைகளின்பின் வந்த சில ஸ்மிருதிகளில் ருதுமதிகளின் விவாகம் கண்டனம் செய்யப்பட்டிருக்கிறது.

* * *

மேற்சொல்லிய காரணங்களால் ஆதியில் விவாகம் பெண் ருதுவானபிறகு நடந்து வந்ததென்றும் அதற்குப்பிறகு சில லௌகிக சௌகரியார்த்தங்களுக்காக கன்னிகைகள் பிரௌடையாவதற்கு முன் விவாகம் செய்யப்பட்டு அது ஒரு வழக்கமாக பிராஹ்மணர்களுக்குள் பரவி அநுஷ்டானத்திற்கு நாளாவர்த்தியில் வந்து ஸ்மிரு

பிதம் பெற்றதென்றும் சுருதிஸ்மிருதி ஆராய்ச்சியினல் நன்கு விளங்கும். ஆகையால் சில மேல்ஜாதியோர்களுக்குள் இவ்வழக்கம் அநுஷ்டானத்தி லிருப்பினும் ருதுமதிகளின் விவாகம் அசாஸ்திரீயமென்றும் விலக்கென்றும் சொல்லத்தக்கதில்லை.

***

அதிபால்ய விவாகத்தினல் உண்டாகும் கேடுகள் அடியில் விவரித்திருக்கிற நமது தேசத்தின் 1911ம் வருஷத்திய ஜனஸங்கியையின் சில விவரங்களால் நன்கு விளங்கும். 1வயதுக்குள் 13,212 பெண்கள் விவாகமாகி அவர்களுக்குள் 1014பேர்கள் கணவனிழந்த விதவைகள் ஆனர்கள். 1 வயதுமுதல் 2 வயதுக்குள் 17753 பெண்களுக்கு கல்யாணமாகி 856பெண்கள் விதவைகள் ஆனர்கள். 2 வயதுமுதல் 3 வயதுக்குள் 49787பேர்களுக்கு விவாகம் செய்யப்பட்டு அவர்களில் 1807பேர்கள் கனவனிழந்தவர்கள். 3 வயதுமுதல் 4 வயதுக்குள் 87568பேர்கள் மணம்புரிந்து அவர்களில்4753பேர்கள் விதவைகள் ஆனர்கள். 4 வயதுமுதல் 5வயதுவரை 134105பெண்களுக்கு கல்யாணம் செய்யப்பட்டு அவர்களில் 9273பேர்கள் கைம்பெண்களாகச் செய்யப்பட்டார்கள். 5 வயதுமுதல் 10 வயதுவரை 2219778பெண்களுக்கு கல்யாணம் செய்யப்பட்டு 94270கன்னிகைகள் விதவைகளாகச் செய்யப்பட்டனர். 10 வயதுமுதல் 15 வயதுக்குள் 10087024 பெண்களுக்கு விவாகம் செய்யப்பட்டு அவர்களில் 223042 பெண்கள் விதவைகளானர்கள். இதுவும் ஒரு பிரமாணமே.

அ. ரங்கஸ்வாமி ஐயர்

---

## நன் மொழி.

---

பிறருக்கு போதிக்கும் ஒவ்வொருவனும் முதலில் தன் அநுஷ்டானத்தில் அப்போதனைகளைச் சரிவரக்கொண்டு செலுத்தக்கடவன்.

***

தன்னைஜயித்த ஒருவன் தான் பிறரை ஜயிக்க விரும்பலாம். ஒவ்வொருவனுக்கும்-தன்னை ஜயித்தல் தான் மிகவும் கஷ்ட ஸாத்தியமானது.

## வருங்கால லக்ஷ்யங்கள். *

### பிரத்தியேகத்துவம். (Individuality)

---

உலகத்தில் இப்போது நடைபெற்றுவரும் அநேக மதங்களுக்குள், கிறிஸ்தவமதம் செய்த முக்கியமான வேலை என்னவென்றால், பிரத்தியேகத்துவம் என்னும் தன்மையை மனிதர்களுக்குப் புகட்டி அதன் உபயோகத்தை அவர்கள் உணரும்படி செய்து, அதனால் அவர்கள் அடையும் பிரயோஜனத்தைப் பரோபகாரத்தின் பொருட்டு அர்ப்பிக்கும்படி செய்ததுதான். மற்றமதங்களும் இதுபோன்ற வேறொரு முக்கியமான தன்மை ஒவ்வொன்றைப் புகட்டி அந்தத் தன்மையைப் பலப்படுத்தின. ஹிந்துமதம் தர்மத்தையும், பார்ஸிமதம் சௌசத்தையும், பௌத்தமதம் நல்லறிவையும், ஹிப்ருமதம் நல்லொழுக்கத்தையும் இன்னும் சில மதங்கள் வேறு சில அம்சங்களையும் பற்றி விசேஷமாய் உபதேசித்தன. அந்த மதங்களெல்லாம் ஸகல பிராணிகளையும் ஸமஷ்டியாய் ஒரே ஜீவனாகவும், ஒவ்வொரு பிராணியையும் அந்த ஸமஷ்டி ஜீவனுடைய அங்கமாகவும் பாவித்தன. வியஷ்டியில் பிரத்தியேகமாய்த் தனித்துப்பார்க்கவேயில்லை. அதனாலே அந்தந்தத் தன்மைகளில் மனிதர்கள் ஸமஷ்டியில் விகாஸத்தை அடைந்துவந்தார்கள்.

அதன்பேரில் ஒரு நூதனமான உலகப்பாங்கை ஏற்படுத்துவதற்கு அடிப்படையாக ஒரு புதிய மதத்தை ஸ்தாபிக்க கிறிஸ்துவானவர் அவதாரமானபோது பிரத்தியேகத்துவத்தின் உபயோகத்தை வெளிப்படுத்தினார். அதற்குமுன் எல்லாஜீவர்களும் சேர்ந்துஸமஷ்டியில்பொதுநன்மைக்குஎவ்வளவுவேலை செய்தார்களோ, அதைக் காட்டிலும்ஒவ்வொரு ஜீவனும் பிரத்தியேகமாய்ப்பலப்பட்டபின், தனித்தனியேபொதுநன்மைக்கு வேலைசெய்வதால், பொதுநன்மை அதிகப்படும் என்பதைக் கிறிஸ்துவானவர் தன்னுடைய உபதேசத்தாலும்

---

* நக்ஷத்திர தூதன்(Herald of the Star) என்னும் ஆங்கிலப் பத்திரிகையின் 1914ஞு மார்ச்சு மாதத்து ஸஞ்சிகைக்கு மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மாளவர்களால் அனுப்பப்பட்ட வியாஸத்திலிருந்து தமிழில் எடுத்தெழுதப்பட்டது.

நடத்தையாலும் நிரூபணம் செய்து காட்டினர். "நான் எப்படி உங்களுக்குத் தொண்டனுய் உழைக்கிறேனே அப்படியே உங்களில் ஒவ்வொருவரும், உங்களைக் காட்டிலும் கீழ்ப்படியில் உள்ள ஜீவர்களுக்குத் தொண்டு செய்யவேண்டும்" என்று போதித்தார். ஸகல பிராணிகளையும் ரக்ஷிக்கவந்த அந்த ஸர்வவல்லமையுள்ள மகாபுருஷனுக்குத் தன்னை ரக்ஷித்துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணமில்லை. அதுதான் அவர் சிலுவையில் அடிபட்டதின் ரஹஸ்யமான தத்துவம். அந்தச் சிலுவையைப் பார்க்கும்போதெல்லாம் ஒவ்வொருவருடைய மனத்திலும் அவர் கொண்ட அந்த எண்ணம் குடிகொள்ளவேண்டுமென்பது தான் கருத்து.

ஒவ்வொரு ஜீவனும் பிரத்தியேகமாய்ப் பலப்பட்டுப் பிரவிர்த்திப்பதில், மற்றவர்களைக் காட்டிலும் தான் முந்தவேண்டும் என்கிற தீவ்ரமான நோக்கம் எப்படி உண்டாகாமலிருக்கும்? ஆகையால் தான் ஒவ்வொருவரும் தன்னுடைய ஸ்வயநயத்தைக் கோரி வேலைசெய்கிறார்களேயன்றித் தன்னுடைய அயலானுக்கு அதனுல் நேரிடக்கூடிய தீங்கைப்பற்றிக் கவனிக்கிறதில்லை. அரசர்களுக்குள் ஆட்சியைப்பற்றிப் பொறுமை ஏற்படுகிறது. முதலாளிகளுக்குள் ஆதாயத்தைப் பற்றிப் பொறுமை ஏற்படுகிறது; ஒரு வகுப்பாருக்கும் மற்றொரு வகுப்பாருக்கும் பொறுமை உண்டாகிறது.

இவ்விதமான போராட்டத்தில் பலக்குறைவானஜீவர்கள் அடங்கிப்போய் பலம் மேலிட்ட ஜீவர்கள் முன்னுக்கு வருகிறார்கள். எளிய தேசத்தாருடைய ராஜ்யத்தை வலுத்த தேசத்தார் கவர்ந்துகொள்ளவேண்டுமென்ற எண்ணங்கொண்டு, ஏதாவது ஒரு காரணத்தை வைத்துச் சண்டைக்கு இழுத்து அளவற்ற உயிர்ச் சேதமும் பொருள்சேதமும் உண்டாகும்படி செய்கிறார்கள். சண்டையில்லாத காலத்திலுங்கூட, மற்ற தேசங்களை நாம் பலத்தில் முந்தவேண்டும் என்கிற ஆசையாலும் மற்றதேசங்கள் நம்மை முந்திவிடுமோ என்ற பயத்தாலும், ஒவ்வொரு தேசத்தாரும் கப்பல் கட்டுவதிலும் சைந்யங்களை அதிகப்படுத்துவதிலும், தங்களுடைய சக்திக்குமிஞ்சி வருஷந்தோறும் ஏராளமான திரவியத்தை வீண்செலவு செய்து வருந்துகிறார்கள். இது போதாமல் மற்றதேசங்களைக் காட்டிலும், கைத்தொழிலிலும் வியாபாரத்திலும் தாங்கள் முந்தவேண்டுமென்

றும், மற்ற தேசத்தார்களுடைய ஐசுவரியங்களை அதன் மூலமாய்க் கைப்பற்றி விடவேண்டுமென்றும், ஒவ்வொரு தேசத்தாருக்கும் பேராசை உண்டாகிறது. ஒரே தேசத்திலுள்ள வியாபாரிகளுக்குள்ளும் தொழிலாளிகளுக்குள்ளும் ஒருவருக்கொருவர் பொறாமை உண்டாகி மற்றவர்கள் கெட்டுத்தாங்கள் வாழவேண்டுமென்று எண்ணிப் பேராசை கொண்டு பெரும் நஷ்டத்தை யடைந்து, முதலை இழந்து விடுகிறார்கள். அந்த மார்க்கத்தில் இப்படிப்பட்ட கஷ்டங்களும் துன்பங்களும், நேரும் என்று தெரிந்தே, கிறிஸ்துவானவர் மிகுந்த அநுதாபத்துடன் மனம் உருகி "நான் உங்களுக்குள் போராட்டத்தை உண்டாக்க வந்தேனேயல்லாமல் ஒற்றுமையையும் ஸமாதானத்தையும் உண்டுபண்ண வரவில்லை" என்று சொன்னார். அந்தப்படியே நடந்துவருகிறது.

ஆனால் அந்தப் போராட்டத்தினின்றும் ஜநித்த பரோபகார புத்தி என்னும் கருவானது, இதுவரை கர்ப்பத்தில் மறைந்திருந்து, போதுமான அளவு முதிர்ச்சியடைந்தபின், இப்போது மனிதனிடத்தில் வெளித்தோன்ற ஆரம்பித்துவிட்டது. அப்படிப் பரோபகார புத்திவாய்ந்த மனிதன் எவ்வளவுக்கெவ்வளவு தன்னிடத்தில் பொருளும் பலமும் அதிகாரமும் அதிகப்படுகின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு பிறருக்குத்தான் செலுத்தவேண்டிய கடமைகளும் அதிகப்படுகின்றனவென்பதை உணருகிறான். தான் சேகரித்த பொருளும் பலமும் எளியவர்களுக்கும் பலமற்றவர்களுக்கும் உதவி செய்வதற்காகவேயல்லாமல் தன் பொருட்டல்லவென்பதை அறிகிறான். அறிவிலும் ஐசுவரியத்திலும் ஸ்வாதந்திரியத்திலும் நிறைந்துள்ள தன்னை அறிவீனர்களும், ஏழைகளும், பராதீனர்களா யுள்ளவர்களும் அபேக்ஷிக்கும்போது, "பூர்வஜன்மாந்தரங்களில் அவர்களுடைய உதவியை நான் அடைந்திருப்பேன், அதனால் தான் அவர்களுக்கு இப்போது உதவிசெய்து அந்தக் கடனைத் தீர்க்க எனக்கு இந்தச்சமயம் வாய்த்திருக்கிறது" என்று எண்ணிக் கொள்கிறான். "உனக்குக் கீழானவர்களுக்கு நீ செய்வதையெல்லாம் எனக்குச் செய்ததாகவே நான் ஏற்றுக்கொள்வேன்" என்று கிறிஸ்துவானவர் சொன்ன வாக்கியத்தை இப்போதுதான் அவனுடைய காதண்டைவந்து ரஹஸ்யமாய்ச் சொல்வதுபோல, அவனுடைய ஞாபகத்துக்குக் கொண்டு

வருகிறான். பசியால் வருந்தும் ஏழைகளின் முகங்களைப் பார்க்கும்போது, அவர்களுடைய கண்களின் வழியாய்க் கிறிஸ்துவானவர் அவர்களைப்பற்றித் தனக்குச் சிபார்சு செய்வதுபோல அவன் மனது துக்குப் படுகிறது.

அநாதையான ஸ்திரீகளும் குழந்தைகளும் ஏக்கமுற்றுக் கண்ணீர் சொரிவதைப் பார்க்கச் சகிக்காமல், "இதுவரை என் ஸ்வயநயத்தையே கருதி என் காலத்தை வீணே கழித்து விட்டேனே, அதற்குப் பிராயச் சித்தமாக இனியாவது ஸகலபிராணிகளிடத்திலும் அன்பு பாராட்டி, என்னுடைய உடல், பொருள் ஆவி அனைத்தையும் பரோபகாரத்தின் பொருட்டு அர்ப்பணம் செய்து என்னின் மெலியார்க்குத் தொண்டு செய்வேன்" எனத் தீர்மானிக்கிறான்.

ஆகவே பிரத்தியேகத்துவத்தின் வருங்கால லக்ஷ்யம் என்னவென்றால், ஒவ்வொரு ஜீவனும் மற்ற ஜீவன்களை முந்தவேண்டுமென்னும் நோக்கத்துடன் செய்யும் போராட்டத்தில் தனக்குக் கிடைக்கும் ஸகல ஸம்பத்துக்களையும் மற்றஜீவன்களுக்குப் பிரதிகூலமாய் உபயோகிக்காமல் அநுகூலமாகவே உபயோகப்படுத்துவதும், ஒருகால், ஒருவருக்கொருவர் ஏதாவது ஒற்றுமைக்குறைவு நேரிட்டபோதிலும், பலத்தைமுன்னிட்டு அநுவிஷபமாய்ச் சண்டை போடாமல், நல்லோர்கள் மூலமாய் அந்த விவாதத்தை நியாயமாய்த் தீர்த்துக் கொண்டு சமாதானத்தை அடைவதும், அதர்மம் நசித்துத் தர்மம் செழிக்கவேண்டுமென்ற நன்னோக்கத்துடன் எல்லா ஜீவன்களும் ஒரு மனப்பட்டு லோகஹிதத்தின் பொருட்டு உழைப்பதும் தான்.

இனி ஜகத்குருவானவர் சமீபத்தில் அவதரிக்கும்போது அந்த லக்ஷ்யத்தை ஸாதித்துக் கொள்ளுவது எவ்விதம் என்பதை நமக்கெல்லாம் தானே நடந்து வழிகாட்டுவார்.

ஸேவானந்தன்.

---

## நன்மொழி.

---

பகையைப் பகை பாராட்டுவதாலேயே குறைக்க முடியாது. பகையை அன்பினால் தான் தீர்க்க முடியும். இது ஒரு ஸநாதன தர்மம்.

# ஹரிஹரர்களின் அத்வைத பாவம்.

விஷ்ணுபக்தன், விஷ்ணுவை ஹரி, மதுசூதனன், முகுந்தன் சக்கரபாணி, கேசவன் இத்யாதி நாமங்களாலும், சிவபக்தன், சிவனை ருத்திரன், அந்தகாரி, காமாரி, சந்திரசேகரன் ஆகிய இப்பெயர்களாலும் துதிக்கிறார்கள். ஆழ்ந்து பார்க்குங்கால் இப்பல்வேறு பெயர்களும் ஒரே அர்த்தத்தைப் போதிக்கின்றன.

2. ஹரி என்றால் பாபநாசகன், மதுசூதனன்=மது (காமம்) என்னும் அரக்கனைக் கொன்றவன்; அதாவது காமநாசகன். முகுந்தன்=மோக்ஷத்தைத் தருபவன்.

3. உருத்திரன்=அக்ஞானத்தை நாசஞ்செய்பவன். அந்தகாரி=இருட்டு என்னும் இராக்கதனை வென்றவன்; அதாவது அவிவேகத்தை நாசஞ்செய்பவன். சிவன், சங்கரன்=சுபத்தையும், மோக்ஷத்தையும் தருபவன்.

சிவன் என்ற பதத்திற்கே, மங்களம், சுகிருதம், ஆநந்தம் எனப்பொருளாம். இப்பெயர்களில் சில அக்ஞான நாசத்தையும், சில ஞானோதயத்தையும் விளக்குகின்றன.

4. ஈசுவரன் மநுஷ்யர்களிடத் தெழும் காமக்குரோதங்களென்னும் தீய எண்ணங்களை முதலில் நாசஞ்செய்து, பின்னர் (ஞானத்தை அருளி) நமக்கு பிரஹ்மாநந்தத்தைத் தருவார். அதைப்பற்றியே, சிவன், மயானவாசி எனப்படுவது; காமக்குரோதாதிகளென்னும் மலினங்களை (அழுக்கை) எரித்த மனது என்னும் மயானத்தின் கண் இருப்பவர். இதைத் தெரிந்து கொள்ளாமல் சாதாரணமாய் பிரேதங்களைச் சுட்டெரிக்கும் சுடலையில் இருக்கின்றார் எனக் கருதுவது தவறு.

5. திருநீறு அகங்கார நாசத்தையும், புலித்தோல் குரோத நாசத்தையும், யானைத்தோல் மத நாசத்தையும் தெரிவிக்கின்றன. இந்த துஷ்ட குணங்களை நாசஞ்செய்ய வேண்டுமென்று (சிவன்) மேற் கூறிய அறிகுறிகளால் போதிக்கின்றார்.

6. சிவன் சந்திரனைப் புனைந்து "சந்திரசேகரன்" என அழைக்கப்படுகின்றார். சந்திரன் மநதிற்கு அதிதேவதை. சிவனிடத்தில் சந்திரகலையும், விஷ்ணுவின் கரத்திலுள்ள சக்ரமும், மநத்தத்துவத்தைத் தெரிவிக்கின்றன. இவை இவர்களுக்கு ஸ்வாதீனமாகி பிரகாசமும் வீர்யமும் மிக்குடையனவாயிருக்கின்றன. இங்ஙனே பக்தனாயுள்ளவன் தன் மநதை ஸ்வாதீனம் செய்து ஈச்வரனிடத்தில் நிலைபெற நிறுத்தினால் அஃது உயர் நலமமைந்த பிரகாசமுள்ளதாகவும் வீர்யமுடையதாகவும் ஆகும். பக்தர்காள்! மநதை வசப்படுத்தி இடையறாமல் ஈச்வரனிடம் செலுத்தி வந்தால், சந்திரனைப் போல் பிரகாச முடையதாகு மென்றும் சக்கரத்தைப்போல் காமக்

குரோதாதிகளென்னும் அசுரக் கூட்டங்களை நாசஞ்செய்யும் சக்தியுடையதாகு மென்றும் (சிவகேசவர்கள்) இந்த அறிகுறிகளால் போதிக்கின்றனர்.

7. சிவகேசவர்களிடத்தில் உண்மையில் பேதமில்லை. பகவான் ஸ்ரீகிருஷ்ணன் அர்ஜுனனுக்கு உபதேசித்துள்ள அடியில் வரும் செய்யுளை நாம் இங்கு கவனிக்கற்பாலர்.

"எத்தேயத் தெத்திறத்தோ ரெவ்வருணத் தெவ்வுருவி னென்னைபாய்ந்தார், அத்தேயத் தத்திறத்தோர்க் கவ்வருணத் தவ்வுருவி னவர்நேராவன், முத்தேவர் முத்தொழிலு முக்குணமுங் கடந்து மறைமுடிவின் முத்தி, வித்தாகித் தனிநின்ற பரப்பிரமப் பழம்பொருள்யான் மெய்க்கொள்வாயே."

8. ஆனால் விசாரணை இல்லாதோருக்கு வித்தியாஸம் காணப்படுவது ஸஹஜமேயாம். அடியில்வரும் பாசுரங்களும் அவ்வத்துவித பாவத்தை விளக்குகின்றன.

தேடுங்கால் தேவனொருவனே யென்றுரைப்பர், ஆருமறியார் அவன் பெருமை. (திருவாய்மொழி.)

ஆதிப்பிரானும் அணிமணிவண்ணனும், ஆதிக்கமலத்து அமர்திருப்பானும், சோதிக்கின் மூவரும் தொடர்ச்சியில் ஒன்றும், பேதித்து உலகோர் பிணங்குகின்றாரே! (திருமந்திரம்).

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும், நன்றே நினைமின்

(திருமூலநாயனர்)

"ஶிவாய விஷ்ணுரூபாய, ஶிவரூபாயவிஷ்ணவெ"

என்ற ஸ்கந்தோபநிஷத்து ரீதிப்படியாகவும் இன்னும் ராமரஹஸ்யோபநிஷத்து மஹோபநிஷத்து இவைகளின் ரீதியாகவும் ஆழ்ந்து விசாரிக்குமிடத்தில் இருவரும் ஏகபரப்பிரஹ்மஸ்வரூபிகள். ஆகவே, இத்தகைய மஹா மூர்த்திகளிடத்தில் பேதங்கொண்டு அறிவின்மையால் தூஷித்துழலும் நேயர்யாவரும் இதனை நன்குணர்வாராக!

ஓம் தத்ஸத்.

P. A. கிருஷ்ணன்.

## சத்தியம்.

சத்தியத்தின் பெருமையைப்பற்றிப் பலநூல்களிலும் புராணங்களிலும் சொல்லப்பட்டிருந்தும் அதைப்பற்றி எழுதவேண்டுமென்று நினைத்ததற்கு ஒரு காரணமுண்டு. அதாவது நாம் சாதாரணமாய் சத்தியம் என்னும் பதத்தின் தாத்பரியத்தைப் பூரணமாகத் தெரிந்து கொள்ளுகிறதில்லை. வாக்கினால் பேசும் சொற்களுக்கு மட்டுந்தான் நாம் அதை உபயோகப்படுத்துகிறோம். தீர்க்க ஆலோசனை செய்து பார்ப்போமானால் மனதினால் எண்ணுகிற எண்ணங்களும் நம்மிடத்தில் தோன்றுகிற இச்சைகளும் கூட சத்தியமாகவே இருக்கவேண்டும். ஏனென்றால் அசத்தியம் அதாவது பொய்ம்மையானது ஓர் வித அழுக்கு. அவ்வழுக்கானது நம்முடைய வாக்கை மட்டுமல்ல, சூக்ஷ்ம சரீரங்களையும் பாதிக்கக்கூடியது. ஒருவன் வாக்கினால் பேசுமுன் மனத்தால் எண்ணவேண்டும். இச்சையால் தூண்டப்படவேண்டும். இந்த இரண்டு சம்பவங்களும் முதலிலுண்டாகித்தான் பிற்பாடு வாக்கினால் பேசவேண்டும். எப்படி ஒருவன் ஒரு கட்டிடத்தைப் பலப்படுத்தவேண்டுமானால் அஸ்திவாரம் முதற்கொண்டே ஜாக்கிரதையாயிருக்கவேண்டுமோ அல்லது ஒரு நதியின் ஜலத்தைப் பரிசுத்தமாய் வைத்துக் கொள்ளவேண்டுமானால் உற்பத்தி ஸ்தானம் முதற்கொண்டு பந்தோபஸ்து செய்யவேண்டுமோ, அதுபோல் ஆரம்பத்திலேயே தகுந்த ஏற்பாடு செய்யவேண்டும். முதலில் நம்முடைய மனதில் உதிக்கின்ற எண்ணங்கள் பரிசுத்தமாயிருக்கவேண்டும். அவ்விதமாகவே நம்முடைய இச்சைகளுமிருக்கவேண்டும். இருக்கத்தவறினாலோ சத்தியம் குலைந்துவிடும். இதை ஒருசிறு உதாரணத்தினால் தெரிந்து கொள்ளலாம். நாம் ஒரு சமயத்தில் உண்மை பேசுவதுபோல் நடித்து உண்மையின் லக்ஷண மின்னதென்று தெரியாமல் தவறான அபிப்பிராயம் கொண்டு மூன்று விதமாய் பிரஸ்தாபிக்கலாம். நாம் வாய்மொழியினால் ஒன்றும் சொல்லாமற் போனபோதிலும் அந்தத் தவறான அப்பியாசத்தையே பலப்படுத்தலாம். சில சமயங்களில் உண்மையை முழுமையும் வெளியிடாமல் வேண்டுமென்றே தப்பிதமான அபிப்பிராயங்களை உண்டுபண்ணலாம். சொன்னமட்டிலுண்மையாயிருந்த போதிலும் சிலவற்றை மறைக்கவேண்டுமென்று எண்ணி நாம் அப்படிச் செய்தோமானால் அது பொய் பேசினதற்குச் சமான

மேயாகும்.

திருவள்ளுவ நாயனர் வாய்மை என்கிற அதிகாரத்தில் சத்தியத்தின் உயர்வைப் பற்றி விவரமாய்ச் சொல்லியிருக்கிறார்.

> "யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும்
> வாய்மையி னல்ல பிற"

கருத்தென்னவென்றால் மெய்யைப்போல் பிறதருமங்களை யாம் கண்டதில்லை என்பதாம். இப்புஸ்தகத்தின் தலைப்பில் அச்சிட்டிருக்கும் "ஸத்யாத் நாஸ்தி பரோ தர்ம:" என்னும் ஸமஸ்கிருதவாக்கியத்தின் அர்த்தமும் அதேதான். எல்லா தருமங்களைக் காட்டிலும் சத்தியந்தான் பெரிதென்பது வெளியாகிறது. ஆகையால் மெய் பேசுவதா யிருந்தபோதிலும், தீமையில்லாத சொல்லாயிருக்கவேண்டும். தகுந்த காரணத்தைப் பற்றித்தான் பேசவேண்டும். சொல்லுவதையும் இனிமையாய்ச் சொல்லவேண்டும். திருவள்ளுவநாயனாரும்,

> "வாய்மை யெனப்படுவது யாதெனின் யாதொன்றுந்
> தீமை யிலாத சொலல்"

எனச்சொல்லியிருக்கிறார். ஆனல் அவர்

> "பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
> நன்மை பயக்கு மெனின்"

என்று சொல்லியிருப்பதைப் பார்க்க ஒருகால் பொய்ம்மையும் பேசலாமே யென்று சந்தேகமுண்டாகலாம். "புரை தீர்ந்த நன்மையைப்பயக்குமானல்" பேசலாமென்று தாத்பரிய மிருந்தபோதிலும் எப்பொழுதும் பொய் பேசாமையே சர்வ சிலாக்கியமமென்பதில் சந்தேகமே இல்லை. தர்மபுத்திரர் அசுவத்தாமா வென்னும் யானை இறந்துபோனவுடன், அந்த சங்கதியை பீஷ்மரிடத்தில் தெரியப்படுத்தினபோது, அவர் மனதில் அதே பெயருள்ள தன் புத்திரன்தான் இறந்துபோனன் என்று நினைக்கும்படியாக யானை என்னும் பதத்தைப் பின்னல் சொல்லி பேரிகை சப்தத்தில் அவர் காதில் விழாமல் போனதினல், அவர் பரமபதத்தை அடைவதற்கு இடையூறு யிருந்ததாகத் தெரியவருகிறது. ஏனென்றால் வாக்கினல் சரியாய்ச் சொன்னபோதிலும் மனதில் சத்தியக்குறை யிருந்தபடியால் அவரைக் குற்றத்திற் குள்ளாக்குகிறது. சத்தியமே பிரஹ்மமெனச் சொல்லப்படுவதால் நாம் அதை அறியவேண்டுமானல் சத்தியத்தையே முக்கியமான தர்மமாகக் கைக்கொள்ளவேண்டும். அதை நாம் எவ்வளவுக்கு எவ்வளவு அநுஷ்டிக்கிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவுதான் நாம் கடவுளை அறியமுடியும்.

பாலகிருஷ்ணன்.

# ஜாதிவேற்றுமை ஏற்பட்ட விதம்.

ஜாதிபேதமென்னும் விஷயத்தை நன்றாக ஆராய்ச்சி செய்து, ஆதியில் ஏற்பட்ட ஒழுங்கு இன்னதென்றும், பின்னிட்ட காலங்களில் அது எவ்விதமான மாறுதல்களை யடைந்ததென்றும், இச்சங்கத்தின் அங்கத்தினர்களாலும் மற்றவர்களாலும், நம்முடைய வேத சாஸ்திர புராணாதிகளையே ஆதாரமாகக் கொண்டு, விஸ்தாரமாக வரையப்பட்டிருப்பதை, என் புத்திக்கெட்டிய மட்டில் ஒருவாறு சுருக்கிக் கூறுகிறேன்.

இவ்வுலக சிருஷ்டியில், முதல்முதல் மனிதவர்க்கம் இப்பூமியிலேற்பட்ட காலத்தில், ஜனனமெடுத்த ஜீவர்களெல்லோரும் சந்திரனிலிருந்து இங்கு வந்தவர்கள். சந்திர கிரஹம் முற்காலத்தில் இப்பூமியைப் போன்ற ஒரு உலகமாகவிருந்து, அதில் ஜீவர்கள் விகாசம் பெற்று வந்தனர். நாளடைவில் அது வாஸத்துக்கு போக்கியமற்றுப் போனதால், இப்பூமி யுண்டாகி அங்கிருந்த ஜீவர்களெல்லோரும் விகாசம் பெறுவதற்காக இவ்வுலகுக் கனுப்பப்பட்டார்கள். அப்படி யனுப்பப்பட்டவர்களில் ஒருவரின் பின் ஒருவராகப் பல கூட்டத்தார்கள், நீண்ட காலங்களில் இப்பூமியை யடைந்து, பற்பல மூலவர்க்கங்களாக வேற்பட்டு, விகாசம்பெற்று வந்தனர். சந்திரனிலும் இதர கிரகங்களிலும் விகாச முறையில் தேர்ச்சிபெற்ற மகரிஷிகள், அவ்வக் காலங்களில் அவதரித்து இவர்களை நடத்திவந்தார்கள்.

இவ்விதம் நான்கு மூலவர்க்கங்கள் இப்பூமியில் நடைபெற்றபிறகு, ஐந்தாவது மூலவர்க்கம் ஆரம்பித்தது. மேற் சொன்னவர்களைப் போன்ற மகான்களே இவர்களை நடத்துவதற்கும் அவதரித்திருந்தனர். அவர்கள், சந்திர லோகத்திலிருந்து இப்பூமிக்கு அனுப்பப்பட்ட ஜீவர்களில், இவ்வைந்தாவது மூலவர்க்கத்துக்குப் பாத்திரமாயுள்ள ஜீவர்களை, ஹிமோத்கிரியின் வடபாகத்திலுள்ள பிரதேசத்தில் ஒருங்கு கூட்டி, அக்கூட்டமானது நாளடைவில் அபிவிருத்தி யாகும்படி பாதுகாத்து வந்தனர்.

இக் கூட்டத்தார்களுக்கு ஆரியர்கள் என்று பெயர். அவர்கள் எல்லோரும் விகாச முறையில் சமமான பக்குவத்தை யடைந்தவர்களெனவும், தங்களுக்கும் ஈசுவரனுக்குமுள்ள ஒற்றுமையை யறிந்து, ஈசுவர சாக்ஷாத்காரத்தை யடையவேண்டுமென்றும் ஒரே இச்சையைப் பிரதானமாகவுடைய முமுக்ஷுக்களெனவும்; உலகத்தில் ஈசுவரனுடைய நியதி நடைபெறவேண்டியதற்காகவும், ஈசுவரனுடைய புகழ் உலகமெங்கும் பரவவேண்டியதற்காகவும், விகாச முறைக்கு ஒத்த கைங்கர்யங்களை மேற்கொண்டவர்களெனவும், ரிக்வேதத்தில் கூறப்பட்டிருக்கிறது. இவ்வித குணங்களை யுடையவர்கள் தான் ஆரியர்கள். ஆரியர் என்னும் பதத்திற்கு பூஜ்யர் அதாவது சிரேஷ்டமானவர்கள் எனப் பொருள் கூறப்படுகிறது.

இவர்களெல்லோரும் ஒரே வருணத்தவர்கள். இவர்களிடம் சுபாவமாகவே யேற்பட்டிருந்த ஆத்ம சக்தியாகிய நற்குணங்கள் இவர்கள் சரீரங்களின் மூலமாகவும் பிரதிபிம்பிக்கும், தேஜஸ் ஒன்று இவர்களிடம் பரவியிருந்தது. இதைத்தான் பிரஹ்மதேஜஸ், வர்சஸ் வர்ணம் எனக் கூறுவது. இத்தேஜஸானது அக்கூட்டத்தார்களெல்லோரிடமும் பரவியிருந்ததால், அவர்களெல்லோரும் பிரஹ்ம வர்ணத்தைச் சேர்ந்தவர்களாகவே யிருந்தார்கள். இப்போது உலகத்தில் ஆரியர்களென்று சொல்லப்படுகிறவர்கள் யாவரும் இக்கூட்டத்தைச் சேர்ந்தவர்களே.

மேற்சொன்ன மகான்களால் நடத்தப்பட்டு வந்த பிரஹ்ம வருணத்தைச் சேர்ந்தவர்களாகிய இக்கூட்டத்தார்கள், ஈசுவர சாக்ஷாத்காரத்தை யடையவேண்டியதற் கநுகுணமாக, கடோபநிஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடி வேதம், கரும்மம், தமம், தபஸ், சத்தியம் ஆகிய சம்பத்துக்களைப் பெறவேண்டும்.

1. வேதமாவது, விகாச முறையையும் ஈசுவர நியதியையும் பற்றிய அறிவு.

2. கருமமாவது, சித்தசுத்தி பெறும் பொருட்டு லோகோபகாரமான தொழில்களை ஈசுவர கைங்கர்யமாக நினைத்துச் செய்தல்.

3. தமமாவது, இந்திரியங்கள், மனம் இவைகளின்நிக்கிரகம்,

4. தபஸாவது, ஈசுவர சாக்ஷாத்காரத்தை யடையவேண்டி யதற்கு முக்கியமாயுள்ள ஏகாக்கிர சித்தம்.

5. சத்தியமாவது, ஒரு விஷயத்தின் உண்மையை யறிந்த பிறகு, அவ்வுண்மையின்படி நடத்தல்.

இக்குணங்களை முறையே ஒன்றன் பின் ஒன்றாக அவர்களடையும்பொருட்டு அம்மகான்கள் பிரமசரியம், கிருஹஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாஸம் ஆகிய நான்கு ஆச்சிரமங்களை ஏற்படுத்தினர்கள்.

முதலாவதாகிய பிரஹ்மசரியத்தில் ஒருவன், ஆத்ம ஞானத்திற்கும் பிரபஞ்சக் ஞானத்திற்கும் ஆதாரமாயுள்ள கல்வியைக் கற்றுக்கொள்ளவேண்டும். இதுதான் வேதம்.

இரண்டாவதாகிய கிருஹஸ்தாச்சிரமத்தில் விடாமுயற்சியுடனிருந்து ஜநங்களின் ஸம்ரக்ஷணைக்கு அவசியமாயுள்ள தொழில்களைச் செய்து உலகத்தாருக்கு உதவவேண்டும். இதை நாயனர் "இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கும், நல்லாற்றினின்ற துணை" எனக் கூறுகிறர். அதாவது கிருஹஸ்தனானவன், மற்ற மூன்று ஆச்சிரமங்களி லுள்ளவர்களும், அவரவர் தத்தமக் கேற்பட்ட ஒழுக்கங்களில் நடப்பதற்காக அவர்களுக்கு ஆகாராதி சௌகரியங்களைக் கொடுத் துதவவேண்டும். இதனல் சித்த சுத்தியை யடைவான்.

மூன்றாவதாகிய வானப் பிரஸ்தத்தில் சகல விஷயங்களிலும் வைராக்கியம், அதாவது, இந்திரியங்களையும் மனத்தையும் விஷயங்களிற் செல்லவிடாமல் இழுத்துக் கொள்ளுதலாகிய குணத்தைச் சம்பாதிக்கவேண்டும். இதுதான் தமம்.

நான்காவதாகிய சந்நியாசத்தில், சகல பற்றுக்களையும் முற்றிலும் அறுத்து, ஈசுவர சாக்ஷாத்காரத்தைப் பெறவேண்டிய ஒரே எண்ணத்தில் மனதை நாட்டி, ஸமாதி நிலையை யடையவேண்டும். இது தான் தபஸ்.

சத்தியமானது பொதுவாக எல்லா ஆச்சிரமத்தார்களிடமு மிருக்கவேண்டும்.

இவ்வித நான்கு ஆச்சிரமிகளுள் கிருஹஸ்தாச்சிரமத்திலுள்ளவர்கள், லோகோபகாரமாக நான்கு விதமான தொழில்களைச் செய்து வந்தார்கள். ஒன்று, ஜனங்களுக்குக் கல்வி கற்பிப்பது. இரண்டு, ஜனங்களுக்கு யாதொரு விதமான கெடுதியும் நேரிடா வண்ணம் பாதுகாப்பது. மூன்று கிருஷி, வாணிஜ்யம் அதாவது பயிர்த் தொழில், பண்டமாற்றுதல் முதலியவைகளைச் செய்து அதை எல்லா ஜனங்களுக்கும் பகிர்ந்து கொடுத்தல். நான்கு இம்மூன்று விதமான தொழில் செய்பவர்களுக்கும் உதவியாகவிருந்து வேண்டிய ஒத்தாசைகளைச் செய்தல்.

ஜனங்களும் அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களும் சொற்பமாக விருந்தவரை, இந்நான்கு வேலைகளும் குடும்பத் தலைவர்களாலேயே கவனிக்கப்பட்டு வந்தன. ஆனால் இவ்வகுப்பில் ஜனனமெடுக்கும் ஜீவர்களின் சங்கியை நாளடைவில் அதிகமாகவும் அவர்களின் சுபாவங்களும் ஆவசியகங்களும் ஒரேவிதமாயில்லாமல் சிறிது மாறுபடவும் ஆரம்பித்தபொழுது, இவ்வேலைகளையெல்லாம் ஒருவனே கவனிக்கச்சாத்தியப்படாமற் போனதுமன்றி, ஒவ்வொரு தொழிலுக்கும் அது சம்பந்தமான அதிகப் படிப்பும், தேர்ச்சியும், சாமர்த்தியமும் அவசியமாய்விட்டன.

இந்நிலைமையில் பிரமசரியத்திலிருந்து கிருஹஸ்தாச்சிரமத்துக்கு வந்த ஒவ்வொருவனும் மேற்சொன்ன நான்கு தொழில்களிலேதாவதொன்றைக் கைக்கொண்டு உழைத்து, உலகத்தாருக்கு உதவவேண்டுமென்னும் நியதியை யேற்படுத்தினார்கள். இதனால் கிருஹஸ்தாச்சிரமத்துக்கு வந்த ஒவ்வொருவரும், அவ்வாச்சிரம காலம் முடியும்வரை மேற்சொன்ன நான்குவிதமான தொழில்களில் தங்கள் சுபாவத்திற்கும் தேகபலத்திற்கும் எது ஒத்ததாகவிருக்குமோ அதைக் கைக்கொண்டனர். இந்நான்குவிதமான தொழில்களுக்கும் வேண்டிய கல்வியானது பிரமசரியாச்சிரமத்திலேயே அவர்களுக்குப் போதிக்கப்பட்டு வந்தது.

இவ்விதம் கல்வி கற்பிக்கும் தொழிலைக் கைக்கொண்டவர்களுக்குப் பிராமணர்களெனவும், ஜனங்களின் பாதுகாப்பை மேற்கொண்டவர்களுக்கு க்ஷத்திரியர்களெனவும், கிருஷி, வாணிஜ்யத்

முதலியவைகளைச் செய்பவருக்கு வைசியர்களெனவும், இம்மூன்று வகுப்பாருக்கும் ஒத்தாசை செய்பவர்களுக்கு சூத்திரர்களெனவும் பெயர் ஏற்பட்டது. இவர்கள் செய்துவந்த தொழில்களில் ஏற்றம் தாழ்ச்சி யொன்றுமில்லை. எல்லாத் தொழில்களும் ஈசுவரகைங்கர்யமாகவும், அவர்கள் கொண்டிருந்த முக்கிய எண்ணமாகிய ஈசுவர சாக்ஷாத்காரத்துக்கு சாதனங்களாகவும் கருதப்பட்டன.

நான்கு பிரிவுகளாகவுள்ள கிருஹஸ்தாச்சிரமகாலம் முடிவாகி, அவர்களடைய வேண்டிய சம்பத்தாகிய சித்தசுத்தியைப் பெற்ற பிறகு, அவர்களொவ்வொருவரும் வாநப்பிரஸ்தம், சந்நியாசம் முதலிய ஆச்சிரமங்களைப் படிப்படியே அடைந்து வந்தார்கள். பிரமசரியம் முதல் சந்நியாசம்வரை அவர்களின் குறி ஈசுவர சாக்ஷாத்காரமேயன்றி வேறல்ல. அதற்கநுகுணமாயுள்ள சம்பத்துக்களையடையும்பொருட்டே இந்நான்கு ஆச்சிரமங்களும் ஏற்பட்டன.

கிருத யுகத்திலிருந்த மனிதர்களெல்லோரும் ஒரே வருணத்தார்களெனவும், அவர்களெல்லோரும் ஞானமார்க்கத்தைப் பிரதானமாக வுடையவர்களென்வும், அவர்களெல்லோரும் அவர்கள் கைக்கொண்டிருந்த ஞானத்தால் பிராமணர்களென்றுபெயர்பெற்றாரென வும், அவர்களொவ்வொருவரும் லோகோபகாரமாக, கிருஹஸ்தாச்சிரமத்தில் நான்குவிதமான தொழில்களைச் செய்து வந்தார்களெனவும், உபநிஷத்துக்களிலும் புராணங்களிலும் கூறப்பட்டிருக்கிறது. அன்றியும் நீண்ட காலத்திற்குப் பிறகு இவைகளின் உண்மைகள் மறந்து போய்விட்டதை நமக்கு ஞாபகப்படுத்தும் பொருட்டு பகவானால் சொல்லப் பட்டிருக்கும் கீதாசாஸ்திரத்திலும், வேதத்தின் ஒரு பாகமாகிய புருஷ ஸூக்தத்திலும், காணப்படுவது இதுவே.

அவரவர்களின் சுபாவத்தையும் செய்யும்தொழில்களையும் கொண்டுவர்ணமானது நான்கு பிரிவுகளாக என்னால் வகுக்கப் பட்டது. அவனவன் சுபாவத்துக் கேற்ற கருமத்தைச் சிரத்தையோடு செய்வதால் ஞானமடைகிறான். சுபாவத்துக்கு ஒத்ததாக அமைந்துள்ள கருமத்தைச்செய்கிறவனுக்கு ஒருநாளும் பாபம் சம்பவிக்காது.

ஶாஸ்த்ரவர்ணாஶ்ரயாஸ்ஸ்ருஷ்டம் கர்மஸு விஹிதா மஶ:।
ஸ்வே ஸ்வே கர்மண்யபிரத: ஸம்ஸித்திம் லபதே நர:।
ஸ்வபாவநியதம் கர்ம குர்வந்நாப்நோதி கில்பிஷம்॥

என கீதையிலும் அகாவது உலகத்திலுள்ள ஸர்வ ஜனங்களையும் ஈசுவரனுடையவிராட் ரூபமாகக்கொண்டு, அதில் பிராமணர்களை முகத்திற்கும், க்ஷத்திரியர்களைப்புஜத்திற்கும், வைசியர்களைத் தொடைக்கும், சூத்திரர்களைப் பாதத்திற்கும் உவமைப்படுத்தி, புருஷ ஸூக்தத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் ஒவ்வொரு அவயவமும் அத்யாவசியமானதென்பதையும், எந்த அவயவம் குறைந்தாலும் அது பூர்த்தியல்லவென்பதையும் யாவரு மறிவார்கள்.

இது நிற்க, மேற்சொன்ன லோகோபகாரமாகச் செய்யப்படவேண்டிய கருமங்கள் (நான்குதொழில்கள்) கிருஹஸ்தாச் சிரமத்துக்கு மட்டுந்தான் ஏற்பட்டன. இவர்கள் வெவ்வேறு தொழில்களைச் செய்து வந்தாலும் ஒரேவிதமான கருத்துள்ளவர்களாகவும், ஒரே கூட்டத்தைச் சார்ந்தவர்களாகவு மிருந்தார்கள். கைக்கொள்ளவேண்டிய தொழிலைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்திலாவது கட்டுப்பாடுகள் ஒன்றுமில்லை. ஞானபாகத்தில் எல்லோரும் ஒரேபடியில் உள்ளவர்கள். இவர்களநுசரிக்கும் தொழிலைக் குறிப்பிடுவதற்காக மட்டும், இவர்களுக்குப் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் எனப் பெயரிடப்பட்டது. இப்பெயர்கள் பிறப்பைக் குறிப்பிடுவதற்காக அல்லவென்பதை இங்கு முக்கியமாகக் கவனிக்கவேண்டும்.

இவ்விஷயங்களை இப்போது நாம் மறந்துபோய் விட்டாலும் கூட கர்மகாண்டத்திலுள்ள சில வாக்கியங்கள் இதை நமக்கு ஞாபகப் படுத்துகின்றன. அதாவது, யோகதீக்ஷை பெற்றுக் கொண்டவர்களும் ஞானமார்க்கத்தை ஆசரிப்பவர்களும் பிறப்பாலும் அநுசரிக்கும் தொழிலாலும் எந்த வகுப்பைச் சேர்ந்தவர்களாகவிருந்த போதிலும் அவர்களைப் பிராமணர்களென்றே அழைக்கவேண்டு மெனக்கூறுகின்றன.

இதனால் ஆதியில் ஏற்பட்ட ஆச்சிரமங்களின் நிலைமை பின்னதென்றும், அதில் இரண்டாவதான கிருகஸ்தாச்சிரமத்தில் ஒருவன் செய்யவேண்டிய தொழில்களிவையென்றும், அப்போது ஜாதிமுதலியவைகளால் துவேஷபுத்தி இல்லையென்றும் நாமறிகிறோம்.

இனி வருணபேதம் ஏற்பட்ட காரணத்தை ஆராய்வாம். மற்றவர்களுக்கு நன்மை செய்வதே தமதுகடமை, அதுவே ஈசுவர கைங்கர்யம், ஈசுவர சாக்ஷாத்காரமே தமதுகுறி என நினைத்துத் தொழில்களைச் செய்து வந்தவரை, மேற்சொன்ன ஒழுங்குகள் சரியாக நடைபெற்று வந்தன. ஆனால் அவர்களெல்லோரையும் ஒரே படியில் வைத்திருந்ததற்குக் காரணமாகிய ஈசுவர சாக்ஷாத்காரத்தைப்பற்றிய அறிவானது நாளடைவில் ஜனங்களிடம் குறைவுபட ஆரம்பித்தபொழுது, ஈஷணாத்திரயம் அவர்களைச் சூழ்ந்து கொண்டது. அதன் பயனாக, ஜனங்கள் மேற்சொன்ன நான்கு விதமான சம்பத்துக்களையும் ஒரே ஜன்மத்தில் அடைவது கஷ்டமென் நினைத்து, ஒவ்வொரு ஜன்மத்திலும் ஒவ்வொன்றைச் சம்பாதிக்க வேண்டுமெனத் தீர்மானித்துக் கொண்டார்கள். இதுதான் சீர்குலைவுக்கு ஆரம்பம்.

இதனால் பெரும்பாலார் பிரமசரியம் முடிவுபெற்று கிருகஸ்தாச்சிரமத்துக்கு வந்தவுடன், அதில் தமக்குப் பொருந்தினதாயுள்ள ஏதாவதொரு தொழிலைக் கைக்கொண்டு, அதிலேயே தங்கள் ஆயுட்கால முழுவதையும் செலவிட ஆரம்பித்தார்கள். சிலர் பிரமசரியத்திலேயே தங்கள் ஆயுட்கால முழுவதையும் செலவிட்டு, அதிகமான கல்விகளைக் கற்றுக்கொண்டார்கள். மற்றும் சிலர் பிரமசரியத்திலிருந்து கிருஹஸ்தாச்சிரமத்தை அடையாமலே, வானப்பிரஸ்தம் அல்லது சன்னியாசத்தைக் கைக்கொண்டார்கள்.

இது ஆரம்பித்த சிறிதுகாலத்திற்குள், கிருஹஸ்தாச்சிரமந்தான் சிறந்ததென நினைக்கப் பட்டதோடு, வானப்பிரஸ்த சந்நியாச ஆச்சிரமங்களுக்கு மதிப்பே யில்லாமற் போய்விட்டது. ஏனெனில் பிரமசரியாச்சிரமத்திலிருந்து நேரே வானப் பிரஸ்தத்தையும் சன்னியாசத்தையும் கைக்கொண்டவர்கள், கிருகஸ்தாச்சிரமத்தின் மூலமாக இந்திரிய நிக்கிரகம் மனோநிக்கிரகம் முதலியவற்றிற்காதாரமாயுள்ள சித்த சுத்தியை யடையாததால், மனத்தை விஷயங்களிலேயே விட்டு, கிருகஸ்தாச்சிரமத்தி லுள்ளவர்களுக்குக் கவலையையும், துன்பத்தையு முண்டுபண்ணினார்கள். சந்நியாசிகளெல்லோரும் வேஷதாரிகளாகவும் கபட சந்நியாசிகளாகவும் ஆய்விட்டார்கள். இதனால் கிருகஸ்தாச்சிரமமே சிறந்ததெனவும், கூன், குருடு, பல ஹீனர் முதலியவர்களுக்கே சந்நியாசம் முதலியவை உரியதெனவும் ஜனங்கள் நினைத்தார்கள்.

மேலும் ஆச்சிரமங்கள், தொழிலின் பாகுபாடுகள் ஆகிய இவற்றிற்கெல்லாம் ஆதாரமாயிருந்த ஞானபாகத்தை ஜனங்கள் நாளடைவில் முற்றிலும் மறந்துபோய் விட்டபடியால், லோபமோகங்கள் மேலிட்டு, பிறப்பும் தொழிலுமே முக்கியமெனக் கொண்டாட ஆரம்பித்தார்கள். பிராமணர்கள் ஸ்வர்க்காதி போகங்களில் ஆசையுற்று, கர்மகாண்டத்தில் சொல்லப்பட்டுள்ள யாக யக்ஞாதிகளை, அவைகளின் உண்மையான அர்த்தத்தை உணராமல் நடத்திவந்தார்கள். அன்றியும் வித்தை கற்பிப்பதும் புரோகிதமும் பாரம்பர்யமாகத் தங்களுடையதெனப் பாத்தியங் கொண்டாடினார்கள். அதுபோலவே மற்றவர்களும் அவரவர் தொழிலில் பாரம்பர்ய பாத்தியங் கொண்டாட ஆரம்பித்தார்கள்.

இதன் பயனாக பிறப்புத்தான் பிரதானமெனக் கருதப்பட்டு நான்கு விதமான தொழில் செய்து வந்தவர்களும் நான்கு தனித்தனிக்கூட்டமாகப் பிரிந்துபோய் தங்கள் தங்கள் தொழில்கள்சரிவர நடைபெறுவதற்காக வேண்டிய சட்டதிட்டங்களை ஏற்படுத்திக் கொண்டார்கள். முக்கியமாக ஒரு கூட்டத்தாருக்கும் மற்றொரு கூட்டத்தாருக்கும் சம்பந்தங்கள் கூடாதென வரையறுத்து, அப்படி ஏதாவது சம்பந்தங்கள் ஏற்பட்டுவிட்டால், அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளையெல்லாம் அநுலோமன் பிரதிலோமன் எனப் பல பெயரிட்டு, அவர்களை சூத்திரர்களோடு சேர்த்து மற்றவர்களுக்குத் தொண்டு புரியும்படி செய்துவிட்டார்கள். இப்படி சூத்திரர்களை இழிவாக நினைத்து அவர்களோடு சேர்க்கக் காரணமென்னவெனில் இச்சீர்குலைவை நிவர்த்திக்கும் பொருட்டு மத்திய காலத்தில் பல மகான்கள் தோன்றி, ஜனங்களுக்கு ஞானத்தைப் போதித்ததில், சூத்திரர்கள் தவிர மற்ற மூன்றுபேர்களிடத்திலும் ஆத்மஞானம் சிறிது பரவ ஆரம்பித்தது. அக்காலத்தில் சூத்திரர்கள் அதைச் சிறிதும் கவனிக்காததால், அவர்களை விலக்கி மற்ற மூவர்களுக்கும் துவிஜர்கள் எனப் பெயர் கொடுத்தார்கள். அதுமுதல் சூத்திரர்கள் வேதாப்பியாசத்திற்கு அருகரல்லரென நினைக்கப்பட்டது. அன்றியும் முதலில் ஏற்பட்ட ஒழுங்கின் கிரமத்தை ஜனங்கள் முற்றிலும் மறந்துவிட்டதால் பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்களென்று சொல்லப்பட்ட இந்நான்கு வகுப்பாரும் ஈசுவர சிருஷ்டியிலேயே தனித்தனியாக ஏற்பட்டதாக நினைத்து, தத்தம் ஜாதிகளில் பெருமை பாராட்டி வந்தார்கள். ஆதியில் வர்ணம் பிரஹ்ம தேஜஸுக்கு உபயோகிக்கப்பட்டதுபோய், இப்போது உடலின் வெண்மை, கருமை முதலிய நிறங்களைக் குறிப்பதற்கு அதை உபயோகித்தார்கள். இவ்விதம் வருண ஆச்சிரமங்கள் முற்றிலும் சீர்குலைவையடைந்துவிட்டன. (தொடரும்.)

M. சுவாமிநாதையர்.

## உதயதிசை நக்ஷத்ர சங்கம்*

லோக ஸம்ரக்ஷணார்த்தம் மஹாகுரு ஒருவர் ஸமீப காலத்தில் அவதரித்து, இவ்வுலகினர்க்கு ஆத்ம வித்தையை உபதேசிப்பார் என்னும் நம்பிக்கை கொண்ட பலரையும் ஒருங்கே சேர்க்கும் பொருட்டு ஏற்பட்ட சங்கம் இது. இப்பூலோகத்தில் அவர்திருவரவைப் பிரசித்தப் படுத்தி, அதன் மூலமாய்ப் பொது ஜனங்களுக்குள் பக்தியை விளைத்தும் ஜனஸமூஹ மானது அவர் வரவை ஆவலுடன் எதிர்பார்க்கும்படி செய்தும் வருவது, இச்சங்கத்தின் மெம்பர்கள் அநுஷ்டிக்கத்தக்க கடமையாகும். இன்னொரு கடமையும் உண்டு. அஃதென்னவெனில், இச்சங்கத்தார் "அவதரிக்கப் போகும் பரமாசாரியனுடைய ஊழியத்திற்காகவே தம்மைத் தியாகம் செய்து கொள்வோம்" என்று சிந்தித்து வருவதும், அதனால் மாநஸிக லோகத்தில் ஜகத் குருவின் காரியத்திற் கேற்ற கருவியாயமைதலுமாம்.

இச்சங்கத்தின் கொள்கைகளாவன:-

1. உலக க்ஷேமத்தின் பொருட்டு ஒரு மஹா குருவானவர் சமீபகாலத்தில் அவதரிப்பார் என்று நன்னம்பிக்கையுடன், அவர் வெளிப்படுங்கால், அவரை அத்தன்மையான குருவென அறியும் மநமாண்புடையராயிருத்தலும்,

2. அவரை எப்போதும் தம் மநத்திற் சிந்தனை கொள்ளுதலும், செய்யும் எக்கருமத்தையும் அவர் கைங்கரியமாகச் செய்தலும், அதனால் அதனைத் தன் சக்தி முழுமையோடும் செவ்வனவே செய்து முடித்தலும்,

3. தினந்தோறும் அவர் அவர் லௌகிக காரியங்கள் செய்து வருவதில், ஒரு சமயத்திலாவது அக்குருவின் வரவை நோக்கிய யத்நங்களுள் யாதேனும் ஒன்றைச் செய்ய முயலுதலும்,

4. பக்தியும், மந உறுதியும், சாந்தமும், தன்கீழ்ப்படிதலும் சீலத்தில் முக்கியமான அம்சங்களாய் அமையும்படி முயற்சித்தலும்,

5. தாங்கள் அம்மஹா புருஷனின் பொருட்டு நடத்த முயலும் ஒவ்வொரு காரியத்திலும், அவருடைய அருள்வெள்ளம் இறங்

---

* ஆங்கிலத்தினின்று மொழி பெயர்க்கப்பட்டது.

கும்படியாகத் திநந்தோறும் முதலிலும், முடிவிலும், பிரார்த்தனை செய்தலும்,

6. எவரிடத்தினும் நலம் தோன்றினல், அதை அறிதலும், ஆதரவு செய்தலும், நன்குமதித்தலும், வணங்குதலும், ஞானமுறையில், நம்மின் மிக்கார், மூத்தோர் உபதேசிக்கும் விதிகளைத்தலை மேற்கொண்டு நம்மால் கூடியவரை நடத்தலு மிவைபோன்ற பிறவுமாம்.

"உலகத்தில் தருமத்திற்குக் குறைவும் அதர்மத்திற்கு ஏற்றமும் வரும்போதெல்லாம் யான் என்னைப் படைத்துக் கொள்ளுகிறேன். நல்லோரைப் பாதுகாத்தற்கும், தீயன செய்வோரை முற்ற ஒழித்தற்கும், தருமத்தை நன்கு நாட்டுதற்கும் யான் யுகந்தோறும் அவதரிக்கின்றேன்," என்பதாக பகவான் கீதையில் அருளியிருக்கிறார். அத்திருவாக்கை அநுசரித்து, இக்கால கதியை அறிவுடனே ஆராய்ந்து பார்க்கில், ஒரு மஹாபுருஷன். குருவாக அவதாரமாவர் என்பதாக அறிஞர்களிற் சிலர் சொல்லுகின்றார்கள்.

ஆனல் முற்காலத்திலவதரித்த லோக குருக்கள் அனைவரும், அவ்வக்காலங்களில் நேர்மையாக வரவேற்கப்பட்டாரில்லை. மனிதர்கள் ஸ்ரீ கிருஷ்ண பகவானையும், பகவான் புத்தரையும் கொல்ல முயன்றும் பலிக்கவில்லை.

பலஸ்டைன் தேசத்தில் கிறீஸ்து பகவானைக் கொன்றே தீர்த்தார்கள். அந்தகாரத்திலேயே வஸிக்கும் ஜீவர்களுக்கு ஜோதியைப் பார்ப்பது அருவருப்பாயிருக்குமன்றோ?

ஆகையால், நாம் எதிர்பார்க்கும் பரமகுரு இனி நமக்குபதேசிக்குங் காலத்திலும் மேற்கூறியவாறு ஒரு வேளை நேரலாம். அவரிடம் அன்பு பாராட்டி அவரைப் பின்பற்றுபவர் அநேகரிருப்பர். அவருக் கெதிரிகளும் பலரிருப்பர். அவர்கள் அவரை ஹிம்சிக்க இயலாதாயினும், அவருக்குத் தீங்கு நினைத்து அவரைத் தூற்றிக் கொண்டிருப்பர்.

தவிரவும், இப்போதே ஜகத்குருவின் அவதாரத்தைப் பற்றி உலகெங்கும் பிரசித்தப் படுத்தி, அவர் வருங்கால் அவர் நல்வரவை

ஜனங்கள் ஆதரவுடனே அங்கீகரிக்கும்படி ஜன ஸமூகத்தில் மேன்மேலும் அன்பும் தயையும் பரவும்படி செய்வது இச்சங்கத்திய ஸஹோதரர்களின் பெரும் பாக்கியம். இவ்விதம் லோக குருவின் வருகையை, கோஷித்துச் செல்லும் முன் தூதர்களாகிய இச்சங்கத்தார் ஜகத்குருவுக்கு ஏற்படக்கூடிய பல சங்கடங்களைத் தாமே முன்னேற்றுக் கொண்டு, அதன் மூலமாய் அவதார காலத்தில் போராட்டம் நிகழாமல், சாந்தமும் ஸமாதானமுமே விருத்திபெற்று, மநுஷ்ய கோடிகள் பரமருடைய உபதேச மொழிகளை இனிது கேட்கும்பொருட்டு, முயன்று வருகிறார்கள்.

இச்சங்கம் 1911-ஆம் ஜனவரி-மீ 11-வயில் காசியில் ஸ்தாபிக்கப் பெற்றது. இப்போது இச்சங்கத்தில் உலக முழுமையுமாக அநேக ஆயிரம் மெம்பர்கள் சேர்ந்திருக்கின்றார்கள். மாது ஸ்ரீ அன்னி பெஸண்ட் அம்மையாரே இச்சங்கத்தின் ரக்ஷகராவர். ஸ்ரீமாந் ஜே. கிருஷ்ணமூர்த்தி யென்பார் இதன் தலைவர். ஒவ்வொரு தேசத்திற்கும் இச்சங்கத்தின் உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்கட்குக் கீழேயும் பற்பல காரியதரிசிகள் உள்ளார். இதற்குச்சட்டதிட்டங்களாவது, சந்தாவாவது ஒன்றும் கிடையாது. இச்சங்கத்தின் ஆறுகோள்கைகளுக்கும் எவரெவர் இணங்கியுள்ளாரோ, அவர்களெல்லோரும், அடியிற்கண்ட விலாஸதாருக்கு ஒரு விண்ணப்பம் எழுதிக் கொண்டு, சங்கத்திற் சேரலாம். ஸ்திரீகளும் இச் சங்கத்திற் சேரலாம்.

இச்சங்கத்திற்சேருபவர்களுக்கு, இச்சங்கத் தலைவர்கையெழுத்துள்ள பத்திரமொன்று கிடைக்கும். இச்சங்கத்தின் யந்திரம் (அறிகுறி) என்னவெனில்ஐந்துகோணமுள்ள,வெள்ளியால்செய்யப்பட்ட நக்ஷத்திரம். இதை மெம்பர்கள் எப்போதும் தம் ஆபரணமாக அணிந்துகொள்ளும்படி, பொத்தானாகவும், ஊசியாகவும்,கடிகாரச் சங்கிலியில்தொங்கவிடும்படியாகவும், இது செய்யப்பட்டிருக்கிறது. இதன் விலை ரூபாய் ஒன்று. இது சம்பந்தமான தமிழ்ப்பத்திரிகைகளை அடியிற்கண்ட விலாஸத்தாருக்கு எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

அ. ரங்கஸ்வாமி ஐயர்,
காரியதரிசி,
உதயதிசை நக்ஷத்ர ஸங்கம், மதுரை.

318

## சமாசாரம்

---

**தென் இந்தியா கன்வென்ஷன், ஈ.எஸ் கான்பரன்ஸ்மீட்டிங்குகளின் நோட்டிஸ்:**—தென் இந்தியாவிலுள்ள பிரஹ்மக்ஞான சங்கத்தின் கிளைச் சபைகளின் இரண்டாவது வருஷக் கூட்டமும், ஈ எஸ் கான்பெரன்ஸ் மீட்டிங்கும் வருகிற ஏப்ரல்மீ 2உ முதல் 5உ முடிய ஈஸ்டர்விடுமுறை நாட்களில், அடையாற்றில் நடைபெறும்.

கூட்டத்திற்கு வர உத்தேசிக்கும் மெம்பர்கள் "சென்னை, பூந்தமல்லிஹைரோட்டு, "பங்களூர் வில்லா" விலிருக்கும், ஐகோர்ட்டுவக்கீல்மிஸ்டர். வி. எஸ். கோவிந்தராஜ முதலியாரவர்களுக்குத் தெரிவிக்கவேண்டும். ஜாகை விஷயமாக, அடையாறு போஜனசாலைசூபரிண்டெண்டெண்டுமிஸ்டர் J.சீனிவாசராவ் அவர்களுக்கு முன்னுடியே எழுதி அவர் மூலம் ஏற்பாடு செய்து கொள்ளவேண்டும்.

கீத்துப்போட்ட அறைகள் (12 அடி×9 அடி) (பாயுடன்) 10 ரூ. (பாயில்லாமல்) ரூ 9 அணு 8. பிப்ரவரிமீ 28உக்குள், மிஸ்டர் J.சீனிவாசராவ் அவர்களுக்கு மெம்பர்கள் இனம் 1-க்கு 1 ரூபா கட்டணம் அனுப்பினுல், ஒரு பொதுக் கொட்டகை போடப்படும்.

---

**ஆசாரச் சீர்திருத்தமும் ஐகோர்ட்ஜட்ஜ்திவான்பகதூர்சதாசிவஜயாவர்களும்:**—நம்முடைய ஸ்மிருதிகளில்சொல்லப்பட்ட நான்கு வர்ணங்கள் அதாவது ஜாதிகளைத்தவிர அவரவர்கள் செய்யும் தொழிலைப்பற்றியும், பேசும் பாஷைகளைப்பற்றியும், கொண்டாடும் மதங்களைப்பற்றியும் ஸ்மார்த்தன் வைஷ்ணவன், மாத்வன், தமிழன், தெலுங்கன், தச்சன், கொல்லன், தட்டான், வண்ணுன், செக்கான், சேணியன் முதலிய அவாந்தரமான உட்பிரிவுகள் காலக்கிரமத்தில் ஆயிரக்கணக்காக ஏற்பட்டுவிட்டன. ஒவ்வொரு உட்பிரிவார்களும் தனித்தனி ஜாதியார்களென்று வியவகரிக்கப்படுகிறது. அந்தந்த உட்பிரிவுக்குச் சேர்ந்தவர்கள் தங்களுக்குள்ளேயே சம்பந்தம்செய்து கொள்ளுகிறதென்று வழக்கமாக ஒரு ஆசாரம் அநுஷ்டானத்திற்கு வந்துவிட்டது. அவ்விதமான ஆசாரத்தை மாற்றிவிட வேண்டியது அவசியமென்று ஒப்புக்கொள்ளுகிறவர்கள் அநேகம் பேரிருந்தாலும், அந்தப்படி அநுஷ்டானத்திற்குக் கொண்டுவருவதற்குப் போதுமான மனோதைரியம் உள்ளவர்கள் கிடையாது. ஹைகோர்ட்டு ஜட்ஜ் சதாசிவ ஐயரவர்கள் தம்முடைய குமாரனுக்கு பாரிஸ்டர் கிருஷ்ணராயர் அவர்களுடைய குமாரியை விவாகம் செய்வித்தார், சென்ற ஜனவரிமீ 20உ அக்கலியாணம் மதராஸில் நடந்ததாம். தமிழ்நாட்டிலுள்ள ஸ்மார்த்த பிராஹ்மணரும் கன்னடநாட்டிலுள்ள மாத்வ பிராஹ்மணரும் ஸம்பந்திகளானுர்கள். இந்த

விவாஹமானது ஆசாரச் சீர்திருத்தவாதிகளில் அனேகருக்கு முன்னேடியாக வழிகாட்டியது போலாகும்.

பரோடாவில்சுகாதாரப்பொருட்காட்சிசாலை:—பரோடா மஹாராஜா அவர்கள் தன்னுடைய பிரஜைகள் எல்லாவிதத்திலும் மேன்மேலும் அபிவிருத்தியடையும் பொருட்டு, ஏராளமான பணச்செலவு செய்து, தன்னுடைய ராஜ்ஜியத்தில் அநேக சீர்திருத்தங்களைச் செய்து வருகிறார்களென்பதை இந்தப்பத்திரிகையின் முன் ஸஞ்சிகைகளில் எடுத்துக் காட்டியிருக்கிறோம். அதுபோல இப்போது தன் ராஜ்ஜியத்திலுள்ள குடிகள் தீர்க்காயுஸையும் ஆரோக்கியத்தையும் சௌக்கியத்தையும் பெறுவதற்கு சாதனமான சுகாதாரவிதிகளை அவர்களுக்குக் கற்பிப்பதற்குரிய அவசியமான புஸ்தகங்களையும் உபகரணங்களையும் கருவிகளையும் அமைத்து பரோடா பட்டணத்தில் (Central Health Museum) என்ற ஒருபொருட் காட்சிச்சாலை கட்டி முடித்திருக்கிறார்களாம். வருகிற மார்ச்சுமீ 1உயன்று கிருஹப்பிரவேசம் செய்வதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறதாம். அந்தக்காலத்தில் அது ஸம்பந்தமான சில பிரஸங்கங்களும் அந்த சங்கதிகளை ஜனங்களுக்குப் பிரத்தியக்ஷமாக நிரூபணம் செய்து காட்டுவதற்காக கண்காட்சிகளும் ஏற்பாடு செய்திருக்கிறார்களாம்.

---

பரோடாவில்ஸ்திரீகளுக்காகக்கலாசாலை:—பரோடாவில் ஸ்திரீகள் படிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட கலாசாலையிலிருந்து சென்ற வருஷம்தான் முதல் தடவையாக பி. ஏ. பரீக்ஷைக்கு 'சாந்தாபாய்' என்னும் ஒருபெண் அனுப்பப்பட்டாளாம். அவள் தேறினதைப்பற்றி பரோடாவிலுள்ள எல்லா ஜாதி ஸ்திரீகளும் சில நாளைக்குமுன் ஒரு சந்தோஷவிருந்து ஏற்பாடு செய்து கொண்டாடினார்களாம். அந்த விருந்திற்கு மகாராஜா அவர்களுடைய மருமகளும், வந்திருந்தார்களாம்.

---

கண்ணனூரில் பெண்களுக்கு ஒரு கவர்ன்மெண்ட் ஹைஸ்கூல்:—ஸ்வதேசாபிமானி என்னும் தமிழ்ப் பத்திரிகைக்கு பத்திராதிபராக விருந்த K. ராமகிருஷ்ணம்பிள்ளை அவர்களின் மனைவி ஸ்ரீமதி. B. கல்யாணியம்மாள், B. A. பரீக்ஷை தேறினவர்கள். அவர்களைக் கண்ணனூரில் கவர்ன்மெண்ட் ஹைஸ்கூல் உபாத்யாயினியாக 100ரூபா சம்பளத்தில் நியமித்திருக்கிறார்களாம். இப்படிக் கல்வியிற் சிறந்த இந்திய ஸ்திரீகள், ஒவ்வொருபெண்பாடசாலைக்கும் சுலபமாய்க் கிடைப்பதாயிருந்தால் மட்டும் நம்முடைய நாட்டில் வயதுவந்த பின்னும் வித்யாசாலைக்குப்போய் பெண்கள் உயர்ந்தபடிப்புப்படிக்க ஹைஸ்கூல்கள் ஏற்படுத்துவது சாத்தியமாகும்.

---

அமெரிக்காவில் குழந்தைகளுக்காக புஸ்தகசாலைகள்:-அமெரிக்காவில் சிறுவர்களும் சிறுமிகளும் உபயோகிப்பதற்காக மாத்திரம்பலவிடங்களில்அநேக

புஸ்தகசாலைகள் ஏற்படுத்தப்பட் டிருக்கின்றனவாம். ஒவ்வொரு புஸ்தகசாலையிலும் சுமார் 30,000 புஸ்தகங்கள் வைக்கப்பட் டிருக்கின்றனவாம். எல்லாப் புஸ்தகங்களும் குழந்தைகள் விரும்பிப் படிக்கக்கூடியவைகளாயும், ஸன்மார்க்க ஒழுக்கங்களைப் பலவிதமாய்ப் புகட்டத் தகுந்தவைகளாயும் இருக்கின்றனவாம். அவைகளை உபயோகிக்கும் பிள்ளைகள் யாதொரு சந்தாவும் கொடுக்கவேண்டியதில்லையாம். அந்தப் புஸ்தகங்களை ஆயிரக்கணக்கான பிள்ளைகள் தினந்தோறும் உபயோகித்து வருகிறார்களாம்.

---

**பம்பாயிலுள்ள பெல்காம்ஸர்தார் ஹைஸ்கூலில் (Boy Scout Movement) சிறுவர்களுக்குள் பரோபகார ஸங்கம்:**—எந்தத்தொழிலானாலும் வித்தையானாலும் குணமானாலும் இளமைப் பருவத்திலிருந்து பயிற்சி செய்தால் மட்டிலும் விரைவாய் அபிவிருத்தி யாகுமென்பது யாவருமறிந்த விஷயம். ஆகையால் ஆபத்ஸகாயம், அநாதரக்ஷணம் முதலான பரோபகார சித்தவிர்த்தியானது பால்யத்திலிருந்து அப்பியாஸமானால்தான் பலப்படும். அதுபற்றியே மேலேகண்ட ஹைஸ்கூலில் (Boy Scout Movement) என்னும் சிறுவர்களின் சங்கம் ஏற்படுத்தப்பட்டதாம். இந்த ஒருவருஷத்திற்குள் அவ்விடத்தில் வியாதியினாலும், வறுமையினாலும், நீர், நெருப்பு முதலான விபத்துக்களாலும் கஷ்டமடைந்த அநேகர்களுக்கு அந்தச் சங்கத்தைச் சேர்ந்த சிறுவர்கள் உத்ஸாகமாய்த் தங்களா லியன்ற உதவி புரிந்ததுமன்றி, மற்றவர்களைக் கொண்டும் உதவி செய்வித்தார்களாம். அதனால் அவர்களுடைய படிப்புக்குச் சிறிதேனும் பாதகமில்லாமல் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதாம். அவர்கள் செய்த வேலையைப்பற்றி பம்பாய்கவர்ன்மெண்டார் (Director of Public Instruction) ரிப்போர்ட்டில் மிகவும் மெச்சி எழுதியிருக்கிறபடியால் மற்றப் பள்ளிக்கூடங்களிலும் அவ்விதமான ஏற்பாடு செய்வார்களென்று நம்புகிறோம்.

---

**கூலிவேலை செய்யும் பிள்ளைகளுக்கு இரவில் தர்மப் பள்ளிக்கூடங்கள்:**—பகல் முழுவதும் சிறு குழந்தைகளைக் கூட்டக் கூலிவேலைக்கு அனுப்பிக் கஷ்ட ஜீவனம் செய்யும் எளிய குடும்பங்களில் பிள்ளைகளுக்குச் சம்பளம் கொடுத்துப் படிப்பிக்கச் சக்தியற்றவர்களா யிருப்பதையும், பகற்காலங்களில் பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பக்கூட சாத்தியமில்லாம லிருப்பதையும் உத்தேசித்து, கோதவிரிஜில்லா பெத்தப்பூர் தாலுகாவில் ஸ்ரீபுரம், சோமவாம், செங்காவரம், திருமாலி, ரங்கம்பேட்டை, முதலான அநேக கிராமங்களில் உள்ள கனவான்கள் அப்படிப்பட்ட பிள்ளைகளுக்கு இராக்காலங்களில் சம்பளமில்லாமல்படிப்பிக்கிறதற்காகப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தி நடத்துகிறார்களாம். மிகவும்நன்றாய் நடந்துவருகிறதாம். அதுபோல மற்ற ஜில்லாக்களிலுள்ள கிராமங்களிலும் ஏன் ஏற்பாடுசெய்து நடத்தக்கூடாது?

387

**தாழ்ந்த ஜாதியார்களை முன்னுக்குக் கொண்டுவருவதற்காக ஸந்நியாசிகளின் ஸங்கம்:**—திருச்சிளுப்பள்ளியில் சில சந்நியாசிகள் "சத்குரு மிஷன்" என்று பெயர் கொண்ட ஒரு சங்கமாகச் சேர்ந்திருக்கிறார்களாம். தாய் தந்தைகளற்ற இந்துக் குழந்தைகளைப் பரிபாலனம் செய்வதும், தாழ்ந்த ஜாதியார்களை முன்னுக்குக் கொண்டுவருவதும் அவர்களுடைய முக்கியமான நோக்கங்கள் என்று தெரியவருகிறது. அதற்காக அவர்கள் வசம் ஒப்புவிக்கப் பட்ட ஒரு விஸ்தாரமான பங்களாவில் வேலையை ஆரம்பித்து நடத்தி வருகிறார்களாம். ஸாமான்ய ஜனங்களுடைய அபவாதங்களைக் கவனிக்காமல் லோக ஸங்கிரஹத்தின் பொருட்டு உழைக்கிறதென்று கங்கணங்கட்டிக்கொண்டு முன்னுக்குவந்த அந்தச் சன்யாசிகளுக்கு நாம் வந்தனமளிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம்.

---

**சென்னைப் பட்டணத்தில் மதுவிலக்குக் கான்பரன்ஸ்:**—லாகிரியான குடிகளை உட்கொள்வது சாஸ்திர விரோதமென்பது மாத்திரமல்ல, தேச சௌக்கியத்திற்கும் மிகவும் விரோதமானது. அப்படியிருந்தும் நம்முடைய தேசத்தில் ஜனங்கள் கூடுகிற ஒவ்வொரு முக்யமான இடங்களிலும் சாராயம் விற்க லைசென்ஸ் கொடுத்துக் கடைகள் வைப்பதனல் ஜனங்கள் தூண்டப்பட்டு அந்தக்கொடிய வழக்கம் அதிகரித்துக் கொண்டு வருகிறது. 1837-ஆம் ஹுத்தில் சாராய லைசென்ஸிலிருந்து சர்க்காருக்கு வரும்படி ஒருகோடியே இருபத்தைந்து லக்ஷம் ரூபாய். 1911-ஆம் ஹு வரும்படி பதினெரு கோடியே எழுபத்தாறு லக்ஷமென்றால் இப்பொழுது எவ்வளவு அதிகரித்திருக்கிறதென்று நாமே நிதானித்துக் கொள்ளலாம். இனியாவது மேன்மேலும் அதிகரிக்காமலும், சிறுகச் சிறுக அந்தக்கொடிய வழக்கத்தை விலக்கும் பொருட்டும் இந்தியாவில் பல இடங்களில் மதுவிலக்குச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்தச் சங்கத்தார்கள் வருஷத்திற்கு ஒரு முறை மகா சபைகூடி அதற்கான முயற்சிகளைப் பற்றி ஆலோசனை செய்து வருகிறார்கள். சென்ற டிசம்பர் மீ 30வ சென்னைப்பட்டணத்தில் அவ்விதமான மகாசபை கூட்டினர்கள். அவர்களுடைய பிரயத்னங்களுக்கு நாமும் உதவியாயிருந்து ஆதரிக்காவிட்டால் அவர்களுடைய நோக்கம் நிறைவேறுவதெப்படி?

---

**குற்றவாளிகளை நல்வழிப்படுத்துவதற்கான சங்கங்கள்:**—காவல் தண்டனை விதித்து ஜெயிலுக்கு அனுப்பப்படும் கைதிகளை நல்வழிப்படுத்துவதற்காக ஏற்கனவே கல்கத்தாவிலும் பம்பாயிலும் பாங்கிப்பூரிலும் (Prisoners' Aid Society) என்ற மூன்று சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்தச் சங்கங்களைச் சேர்ந்த மெம்பர்கள் அடிக்கடி ஜெயிலுக்குப் போய்க் கைதிகளைப் பார்த்துப் புத்திமதி முதலானவை சொல்லித் திருத்துவதும் தவிர பிழைப்பிற்கு வேறு மார்க்கமில்லாமல் குற்றஞ் செய்து தண்டனைக்குள் ளானவர்கள் விடுதலையாய் வந்தவுடன் அவர்கள் நல்வழிப்படவேண்டிய நோக்கத்துடன் அதற்குத் தகுந்த கனவான்களிடம் அவர்களுக்குத் தெரிந்த தொழில்களில் வேலைகளைச் சம்பாதித்துக் கொடுத்தும், மற்றப்படி தேவையான உதவி புரிந்தும் உழைத்து வருகிறார்கள். அந்தச் சங்கங்களால் மிகுந்த நன்மையுண்டாவதுகண்டு, அதுபோல இப்போது ரங்கூனிலும் ஒரு சங்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதாம். அதேமாதிரி ஒவ்வொரு பெரிய பட்டணங்களிலும் சங்கங்கள் ஏற்படும் பக்ஷத்தில் நாளடைவில் குற்றவாளிகள் அரிதாய் விடுவார்கள்.

**யுத்தத்தில் காயப்பட்டு விழும் குதிரைகளின் கதி:**—மனிதர்களுடைய அகந்தையாலும் மமதையாலும் ஏற்பட்டு இப்போதுஐரோப்பாவில்நடந்துவரும் யுத்தத்தில், இருதரப்பாரும் தங்களுக்குதவியாக லக்ஷக்கணக்கான குதிரைகளை ரணகளத்திற்குக் கொண்டுபோயிருக்கிறார்கள். அந்தக் குதிரைகள் போதுமான தீனியில்லாமலும், இளைப்பாற நேரமில்லாமலும், நல்லபாதையில்லாத காடுமலைகளில் பீரங்கி முதலான பளுவான சாமான்களை இழுத்தும், பின்வாங்கியோடும் எதிரிகளை விரட்டவோ, அல்லது பின் தியர்ந்துவரும்சத்துருக்களிடமிருந்து தப்பிக்கவோ, அதிக வேகமாய் ஓடியும், காற்று, மழை, வெயிலில் அடிபட்டும், படுகிற கஷ்டங்கள் சொல்லி முடியாது. அப்படிக்கிருந்தும் குதிரைகள் காயப்பட்டு விழுந்தால் விழுந்த இடத்திலேயே போட்டுவிட்டுப் போய் விடுகிறார்கள். காயத்தின் தொந்தரவினாலும் ஆகாரமில்லாமலும், அந்தக் குதிரைகள் கஷ்டப்பட்டுச் சாகின்றன. இந்தக் கொடுமையைச் சகிக்காமல் (Miss Luid of Hagely) என்னும் பெண்மணி, யுத்தத்தில் காயப்பட்ட மனிதர்களுக்காக ஆஸ்பத்திரி முதலானவைகள் ஏற்படுத்திக் கவனிப்பது போலக் குதிரைகளையும் கவனிக்க ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று போராடி அதற்கு வேண்டிய பிரயத்னங்களைச் செய்து வருகிறார்களாம். அதன்றோ ஜீவகாருண்யம்?

---

**பம்பாயில் பிராணிகளுக்குக் கொடுமை செய்வதைத் தடுப்பதற்காக ஒரு ஜீவகாருண்ய சங்கம்:**—வயது சென்றவைகளும், நோயினால் வருந்துகிறவைகளும்,பலவீனமானவைகளும், புண்பட்டவைகளுமான மாடுகள், குதிரைகள் முதலானவைகளை வண்டியில் பூட்டி யோட்டுவது, சௌக்யமான பிராணிகளானாலும் அவைகளின் சக்திக்கு மிஞ்சிப்பார்ங்களை இழுக்கச்செய்வது,அவைகளை அடித்தாவதுமற்றை விதமாகவாவது தொந்தரவுசெய்வது,முதலிய கொடுமைகளைத் தடுப்பதற்காகப் பலவிடங்களில் சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. பம்பாயிலுள்ள அவ்விதமான சங்கத்தின் வருஷோத்ஸவம் நாளது பிப்ரவரிமீ 3உ நடை பெற்றது. பம்பாய் கவர்னரவர்களே அக்கிராஸனம் வகித்தார்கள் அன்று தினம் படித்த ரிப்போர்ட்டிலிருந்துகொடுமை செய்தவர்களைத் தண்டிப்பதற்காக அந்தச் சங்கத்தார் 1910—11-ஆம் வருஷங்களில் 14813 பிராதுகள் போட்டதில்13727 பிராதுகளில் தண்டனை விதிக்கப்பட்டதாயும் 1912—13-ஆம் வருஷங்களில் 13111 பிராதுகள் போட்டதில் 12573 பிராதுகளில் தண்டனை விதிக்கப்பட்டதாயும் தெரியவருகிறது. மாடு, குதிரைமுதலான பெரிய பிராணிகளை மாத்திரம் கவனிக்கிறதென்று வைத்துக் கொள்ளாமல் சிறிய பிராணிகளையும் அவ்விதமாகக் கவனிக்கவேண்டியஅவசியத்தைப்பற்றி அன்று அக்கிராஸனம் வகித்த கவர்னரவர்கள் சங்கத்தார்களுக்கு வற்புறுத்திச் சொன்னார்களாம்.

---

**அன்னிபெஸண்டு அம்மாளவர்களின் வரவு:**—பிரஹ்மக்ஞான சபையின் பிரெஸிடெண்டாகிய மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மாளவர்கள் வருகிற மார்ச்சுமீ 20உ சனிக்கிழமையும் 21உ ஞாயிற்றுக்கிழமையும் மதுரைக்கு வருவதாக ஒப்புக்கொண் டிருக்கிறார்கள். அந்த இரண்டு தேதிகளிலும் அவர்களால் சில உபந்யாஸங்கள் செய்யப்படும். அந்த இரண்டு தினமும் கச்சேரி இல்லாத நாட்களானபடியால் அடுத்த ஜில்லாக்களிலுள்ளவர்கள் வந்து உபந்யாஸங்களைக் கேட்டு நலம் பெறுவார்களென்று நம்புகிறோம்.

**வேஸவாதந்தன்.**

383

## சிறுவர்க்குரிய விஷயம்.

### ஸுகந்யையும் நரேந்திரனும்.

ஸுகந்யை:—நரேந்திர! நீ அநந்தன் முதலிய உன் ஸ்நேஹிதர்களுடன் ஞாயிற்றுக் கிழமைதோறும் காலையில் எங்கேபோய் வருகிறாய்?

நரேந்திரன்:—ஸுகந்யே! நான் உனக்குச் சொல்லவேண்டுமென்று எண்ணியிருந்த விஷயத்தை நீயாகவே கேட்டுவிட்டாய். நாங்கள் இன்றுபோய்ப் படித்த விஷயத்திற்கு நீயே தகுந்த உதாரணம்.

ஸுகந்யை:—இன்று ஞாயிற்றுக்கிழமையாயிற்றே, உங்களுக்குப் பள்ளிக்கூடமேது?

நரேந்திரன்:—நாங்கள் ஞாயிற்றுக் கிழமைகளில் காலையில் ஸங்கமொன்று கூடி, அதன் தலைவராகிய எமது உபாத்யாயரிடமிருந்து பல அருமையான விஷயங்களைக் கற்று வருகிறோமென்பதை நீ அறியாயோ? பள்ளிக்கூடத்தில் படிப்பிக்கப் பெறாத சில விஷயங்களைப் புதிதாக இச்சங்கத்தின் மூலமாக அறிந்துகொண்டிருக்கிறேன்.

ஸுகந்யை:—நீ சேர்ந்திருக்கும் ஸங்கத்தின் பெயரென்ன? அதன் நோக்கங்கள் என்ன என்பதைச் சற்று சொல்வாய். நம் இந்தியாவில் பெண்களே இப்போதுதான் கொஞ்சம் படிக்கத் தலைப்பட்டிருக்கிறார்கள். ஆகையால், பெண்களாகிய எங்களுக்குரிய சங்கங்கள் இன்னும் வெகுவாக ஏற்படவில்லையேயென்று நான் வியசனிப்பதில் பிரயோஜனமில்லை.

நரேந்திரன்:—ப்ரியமே. நீ அப்படி வியசனிப்பது தவறுதான். சென்ற சில வருஷங்களாக நம் தேசம் அபிவிருத்தி யடைந்திருப்பதையும், இப்போது சென்ற சிலமாதங்களுக்குள் நேர்ந்திருக்கிற அபிவிருத்தியையும் ஒப்பிட்டுப் பார்ப்போமானால், சென்ற சில மாதங்களுக்குள்ளேயே அதிகமான அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறதென்று நீ அறிந்துகொள்வாய்.

ஸுகந்யை:—அப்படியானால், சென்ற சில மாதங்களுக்குள் ஏற்பட்டிருக்கிற அபிவிருத்தியைக் காட்டிலும், அடுத்த சில வாரங்

களுக்குள், பெண்கல்வியின் விருத்திக்கேற்ற சீர்திருத்தங்கள் அநேகம் ஏற்படலாம். இது சரியான சமாதானம் தான். நல்லதிருக்கட்டும், உன் ஸங்கத்தைப் பற்றிய விவரம் சொல்லவில்லையே?

நரேந்திரன்:—எங்களுடைய ஸங்கத்தின்பெயர் "ஸ்வர்ணமணிமாலை" அதில் சேர்ந்திருக்கிற ஒவ்வொரு பிள்ளையையும் ஒரு மணியென்று சொல்வதுண்டு. ஸ்நேஹந்தான் இவ்விதம் தனித்தனியாயுள்ள மணிகள் எல்லோரையும் மாலையாக ஒருங்கே சேர்ப்பதற்கேற்ற கம்பி.

ஸுகந்யை:—உங்கள் ஸங்கத்தின் பெயரைக் கேட்ட மாத்திரமே எனக்கு அளவில்லாத உத்ஸாகம் ஏற்பட்டது. அதன் நோக்கங்களென்ன?

நரேந்திரன்:—இச்சங்கம், நாம் எந்த உயிர்ப்பிராணியிடத்தும் அன்பு பாராட்டுவதற்கும், அதனால் நம்மினும் மெலியாரிடத்தில் இரக்கங்கொண்டு, அவர்களுக்கு உபகரிப்பதற்கும், நாம் மேன்மையான எண்ணங்களையும், மதுரமான வார்த்தைகளையும், அழகான கார்யங்களையுமே கைக்கொள்வதற்கும் ஏற்பட்டது. இச்சங்கம், அதிற் சேர்ந்திருக்கும் பிள்ளைகளை இம்முறையிலேயே பழக்குகின்றது.

ஸுகந்யை:—இச்சங்கம் யாரால் ஏற்படுத்தப் பட்டது? இது ஸ்தாபிக்கப்பட்டு எத்தனை வருஷமாயிற்று?

நரேந்திரன்:—"ஸ்வர்ணமணிமாலை" அமெரிக்காவில் 1895-ம் வருஷத்தில் Mr. வால்டர்ஸ் என்பவரால் ஏற்படுத்தப்பட்டது. இது இவ்வூரிலே மட்டும்தான் இருக்கிறதென்று எண்ணிக்கொள்ளாதே. நம் இந்தியாவில் பல ஊர்களில் இச்சங்கம் இருப்பது போலவே, மற்ற தேசங்களிலும் பற்பல ஊர்களில் உள்ளது. ஆஸ்டிரேலியாக் கண்டத்தில் இச்சங்கம் மிக ஊக்கமாய் நடைபெற்று வருகிறது. இது ஏற்பட்டு இப்போது 21 வருஷங்களாகின்றன.

ஸுகந்யை:—இந்த ஸங்கத்தின் கொள்கைகள் உயர்ந்த நோக்கங்களாகவே யுள்ளன. இச்சங்கத்தின் உயர்நோக்கங்கள் பெண் பிள்ளைகளாலும் பழகத்தகுந்தவைகளே.

நரேந்திரன்:—இச் சங்கம் சிறுவர்களுக்கு மட்டு மல்லாமல் சிறுமிகளுக்கும் உரியது என்றே, இச்சங்கத்தின் பத்திரிகையில் எழுதப்பட்டிருக்கிறது. இதுவரை மூன்று பத்திரிகைகள் இச் சங்கத்தார் வெளியிட்டிருக்கிறார்கள். அவைகளை உனக்குக் கொடுப்பேன், நீ நன்றாய் அவைகளைப் படித்துப் பார்.

ஸுகந்யை:—அப்படியானால், நான் இப்பொழுதே அச் சங்கத்தில் சேர வேண்டும். அச் சங்கத்தின் தலைவர் யார்? அவர் விலாசமென்ன?

நரேந்திரன்:—"ஸ்வர்ணமணி மாலைச் சங்கத்தின் உறுதிமொழியாகிய நான்கு வசநங்களையும் பிரதிகாலையிலும் படித்து வருவதோடு, அதன் பிரகாரம் நடக்கவும் முயலுவேன்" என்று எழுதி, அதன் கீழ் உன்கையெழுத்தையும் விலாசத்தையும் எழுதி, அக்கடிதத்தை "ராமசுப்பையர், பிரஹ்மக்ஞான மந்திரம், மதுரை" என்ற விலாசத்திற் கனுப்பி விடவேண்டும். நீ இதிற் சேருவது சிரமமான காரியமல்ல, ஆனால் இதன் நோக்கங்களை உன் நடவடிக்கையில் அப்பியஸிப்பதே பெரிய காரியம். ஆகையால் நீ அவசரப்படவேண்டாம், நான் கொடுத்திருக்கும் மூன்று துண்டுப் பத்திரிகைகளையும் படித்துப் பிறகே நீ சேரலாம்.

ஸுகந்யை:—நரேந்திர! நான் அப்படியே செய்வேன். நீ போய் சாப்பிட்டுவா. அதற்குள் நான் படித்துவிடுவேன்.

நரேந்திரன்:—இன்று தாமஸம் ஏற்படலாகாதே யென்று பயந்து, காலையில் ஆஹாரம் ஒன்றும் சாப்பிடாமற் போனதனால் நேர்ந்த களைப்பு இப்போது தான் தீர்ந்தது.

ஸுகந்யை:—நரேந்திர! நான் ஒரே சிந்தையாய், நீ கொடுத்த பத்திரிகைகளைப் படித்தேன். ஸுசீலா, சம்பகமாலிநீ, மத்ஸ்யகந்தி முதலிய என்தோழிகளுக்கும் இச்செய்தியைச் சொல்லி, நானே பெண்களுக்காக இச்சங்கத்தின் கிளைச்சபை யொன்று ஏற்பாடு செய்ய உத்தேசிக்கிறேன்.

நரேந்திரன்:—நீ முன் சொன்ன பிரகாரம் சென்ற பல மாசங்களாகக் கொஞ்சமும் எதிர்பாராத பெரிய உபகாரமான காரியமொன்றை, இன்றே செய்து முடிக்க யத்தனித்திருக்கிறாயல்லவா?

ஸுகந்யை:— காலம் இவ்விதந்தான் வேகமாய் மாறுதல்களை உண்டாக்குகின்றது என்று நான் நன்றாயறிந்துகொண்டேன். இவை இருக்கட்டும். நீ இன்று படித்த விஷயத்திற்கு என்னையே உதாரணமாகச் சொன்னாயே. அதன் விவரத்தையும் கொஞ்சம் சொல்ல வேண்டும்.

நரேந்திரன்:—ஸுகந்யே! சொல்லுகிறேன் கேள். இன்று எங்களுக்குப்படிப்பிக்கப்பட்ட விஷயம் எண்ணங்களைப் பற்றியதே. ஏனென்றால், நாம் பேசும் ஒவ்வொரு வார்த்தைக்கும், நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்திற்கும், நாம் கொள்ளும் ஆசை ஒவ்வொன்றிற்கும் மூலகாரணம் நம்முடைய எண்ணங்களேயாம். ,,ஒருவன் எவ்விதம் நினைக்கிறானோ, அவ்விதமே யாகிறான்'' என்று உபநிஷத் ஒன்றில் சொல்லப்பட்டிருக்கிறது. இதைஇன்னும் சற்று ஆலோசித்துப்பார்ப்போம். ஒரு கொற்றன் மாளிகையொன்று கட்டுவதற்கு திடீரென்று ஆரம்பிக்கின்றானில்லை. ஆனால் முன்னாடியே கட்டவேண்டிய மாதிரி, ஒருபடம் தயார்செய்து வைத்துக்கொண்டு, அந்த மாதிரிப்பிரகாரமே தன்வேலையை முடிக்கிறான். அதன்சாயை போலவே தன்கட்டிடத்தை முடிக்கிறான். அதேமாதிரி மநத்தில் தெளிவாய் எண்ணாமல் எந்த ஆசையையும் நாம் கொள்கிறோமில்லை, எந்தக்காரியத்தையும் செய்கிறோமில்லை. ஆகையால் எண்ணங்களின் தீவ்ரமான சக்திக்குத்தக்கபடி தான் நம்முடைய ஆசைகளும் காரியங்களும் முடிவுபெறுகின்றன. இனி எண்ணங்களின் சக்தியானது பிறரை எப்படி பாதிக்கின்றது என்று கேட்பாயானால் நம்முடைய எண்ணங்கள் அலைகள் போல வெளிக்கிளம்புகின்றன. நம்முடைய எண்ணங்களைப்போலவே நினைக்கும் சுபாவமுடைய நம் சிநேகிதர்கள் ஸஹோதரர்களுடைய மநத்தைத் தாக்குகின்றன. இதனால்தான் நானேஉனக்குச் சொல்லவேண்டுமென்றிருந்த விஷயத்தைப்பற்றி நீயே கேட்க ஆரம்பித்தாய். நாங்கள் படித்து வந்த உண்மையை நீயே ரூபித்துவிட்டாயென்று சொன்னதின் காரணம் இதுதான்.

வசந்தாநந்தர்.

---

## தியானக்கிரம விஷயம்.

### பிப்பிரவரி மாசம்.

---

(15) நீ உன் குருநாதனை எப்போதும் மனத்தில் தியானங் கொள்வதனாலேயே, அறிந்துகொண்டு, அவரைப் பூர்ணமாக நம்ப வேண்டும். இல்லையாயின், அவர் உனக்கு உதவிபுரிய முடியாது. பூர்ண நம்பிக்கை ஏற்படாதவரையில் அவருடைய கருணையும் சக்தியும் உன்னிடம் வாரா.

(16) நீ உன் குருநாதனை முழுமனத்துடன் நம்பவேண்டும். உன்னையும் நீ நம்பவேண்டும்.

(17) நீ குருநாதனைப் பார்த்துவிட்டால், உனக்கு அவரிடம் திடநம்பிக்கை ஏற்பட்டு, அநேக ஜன்மங்கள் வரை நீடித்திருக்கும்.

(18) இந்த வசனங்கள் என் ஸத்குருவினால் எனக்குபதேசிக்கப்பட்டவைகள். அவரன்றி என்னால் ஒன்றும் முடிந்திராது.

(19) குருநாதனுடைய ஒரு ஸமிக்ஞை (குறிப்பு) கவனிக்கப்படாவிட்டாலும், அல்லது அவருடைய வார்த்தை யொன்றை நாம் கவனியாது தவறவிட்டாலும், அது போனதேயாம். ஏனென்றால் அவர் ஒன்றையும் இரண்டு தரம் சொல்லமாட்டார்.

(20) நீ ஸத்குருவின் சிஷ்யனாகும்போது உன்னுடைய எண்ணத்தை அவர் எண்ணத்தோடு ஒத்துப்பார்த்து, உன் எண்ணங்கள் சிலாக்கியமானவைதானா? என்று பரீக்ஷித்தறிந்து கொள்ளலாம்.

(21) குருநாதன் ஸர்வக்ஞனாகையால் அவருடைய எண்ணம் குற்றமற்றதென்றறி.

(22) குருநாதன் உடனே பார்க்க வருவாரென்பதை அறிந்தால், ஒரு வேலையை நீ எப்படிச் செய்வாய் என்பதை ஆலோசி. நீ செய்யும் எல்லா வேலைகளையும் இவ்விதம் ஆலோசித்துச் செய்யவேண்டும். எல்லா வேலைகளையும் நீ அவர் நிமித்தம் செய்யவேண்டும்.

(23) உலகம் நல்லதென்று புகழும் ஒரு பெருங்காரியத்தைவிட, குருநாதனுடைய பிரவிர்த்திக்கு நேரே அநுகூலமாயுள்ள ஒரு சிறிய காரியம் அதிக மேன்மையானது.

(24) குருநாதனைப் பின்பற்ற விரும்புமவர்கள் எது எப்படி நேரினும், நீதிநெறி வழுவாது செல்ல ஏற்கனவே தீர்மானித்தவர்களாயிருப்பார்கள்.

(25) நீ அடையவேண்டியது எவ்வளவு பெருமை யுள்ளதாக விருப்பினும், சுயநலத்தை விரும்பிய எல்லா இச்சைகளும் பந்தப்படுத்துமென்பதை நீ ஞாபகத்திற் கொள். சுயநலம் பற்றிய ஆசை போனாலன்றி, நீ குருநாதனின் ஏவலுக்குட்பட்டு நடக்க, முழுதும் ஸ்வதந்திரனல்ல.

(26) நீ உன் முன்னிலையில் ஏற்படுத்திக் கொள்ளவேண்டிய தர்மம் குருநாதனுடைய வேலையைச் செய்யவதேயாம். நீ வேறு எவ்வேலையைச் செய்ய நேர்ந்தாலும், இந்த மறத்தல் தகாது. இதற்கிடையூறான எக்காரியமும் விலக்கப்படவேண்டும்.

(27) குருநாதன் எப்போது திருவாய் மலர்ந்தருளுவாரென்று காத்திருந்து, அவருடைய ஆக்ஞையை யுற்றுக் கேட்டுக் கவனத்துடனறிந்துகொள்.

(28) அவர் காட்டும் சொற்ப ஜாடையினாலே விஷயத்தையறிந்து கொள்வாய்.

(29) நீ அவருடைய இரஹஸ்யம் எவ்வளவு மெல்லியதாயினும், அதனைக் கேட்கும் செவித்திறனுள்ளவனா யிருத்தல் வேண்டும்.

## மார்ச்சு மாதம்.

மாசாந்தரஅப்யாஸம்:—"ஒரு மநுஷ்யன் முயற்சித்து ஸாதித்திருக்கிறதை, மற்றொரு மனிதனும் ஸாதிக்கலாம். நானும் ஒரு மநுஷ்யனே. ஈசுவரனும் என்னிடமிருக்கிறார். ஆகையால் இதை நான் செய்யக்கூடும், செய்தே முடிப்பேன்" என்று உனக்குள்ளேயே சொல்லிக்கொண்டு திடமாய் ஸங்கல்பித்துக்கொள்.

## வார அப்யாஸம்.

1-வது வாரம்:—ஜயம் பெற விரும்பும் ஒருவன், என்ன போதிக்கப் படுகிறதோ, அதை எள்ளளவேனும் தவறாமல் சரியாய் அநுஷ்டிக்கவேண்டும்.

2--வது வாரம்:—மேன் மார்க்கத்தில் செல்லுபவன் ஒருவன், ஒவ்வொரு விஷயத்தையும் தனக்குத் தானே ஆலோசித்து நிதானித்துக் கொள்ளப் பயிலவேண்டும்.

3--வது வாரம்:—நீ மேன் மார்க்கத்திலடிவைக்க வேண்டுமானால், உன் ஸங்கல்பம் துவைக்கப்பட்ட எஃகு போலிருக்க வேண்டும்.

4--வது வாரம்:—மேன்மார்க்கத்திலேறிய மனிதன் ஜீவிப்பது தனக்காகவல்ல, பிறருக்காக; அவன் தன்னை மறந்தவனாகி, பிறருக்குக் கைங்கர்யம் செய்வதிலேயே முயற்சிக்கிறான்.

5-வது வாரம்:—நீ அம்மார்க்கத்தையே முற்றும் அநுஸரித்து அம்மார்க்கத்துடனேயே ஒருமைப் படுதல் வேண்டும். அதில் ஸம்சயத்துடன் இங்குமங்கும் திரும்பாமல், நேரே அதில் செல்வது உன்னுடைய ஸ்வபாவமாகவே ஏற்படுதல் வேண்டும். உனக்கு அது ஸாதாரணமான வழக்கமாகவே ஏற்படவேண்டும்.

## தினசரி அப்யாஸம்.

(1) ஜயம்பெற விரும்பும் ஒருவன் என்ன போதிக்கப்படுகிறதோ, அதை எள்ளளவேனும் தவறாமல் சரியாய் அநுஷ்டிக்க வேண்டும்.

(2) அவருடைய உதவியால் நான் மேன்மார்க்கத்தில் பிரவேசித்திருக்கிறேன்.

(3) இம் மேன் மார்க்கத்திற்குரிய ஸாதனங்கள் நான்காவன:—

பகுத்தறிவு—விவேகம்

ஆசையின்மை—வைராக்யம்.

நல்லொழுக்கம்—இந்திரிய நிக்ரஹம்.

அன்பு—பிரேமை.

(4) நீ பிறர்க்குதவி செய்ய, உனக்குச் சக்தியைக் கொடுக்கும் ஞானமும், ஞானத்திற்கு வழிகாட்டும் தீவ்ரமான மனோசங்கற்பமும் அதை உத்ஸாஹப்படுத்தும் அன்பும் ஆகிய இவைதான் உன் லக்ஷ்யங்கள், அதாவது நீ பெறவேண்டிய குணங்கள்.

(5) அறிதல், துணிதல், தீர்மானித்தல், மௌனமாயிருத்தல் இவைகளைச் சாதனங்களாகச் சொல்வதும் ஒரு முறை.

(6) "என்னால் இக்காரியம் செய்யக்கூடும், நான் செய்வேன்" என்று உனக்குள் சொல்லிக்கொள்.

(7) குருநாதனின் போதனையைச் சரியாய்க்கிரஹித்து அவரைப்போலவே அநுஷ்டிக்கக்கூடுமாகில், இதை வாசிப்போருக்கும், இதை எழுதியவருக்கு லபித்ததுபோல் அப்பெரிய மார்க்கத்தின் கதவு சுழன்று திறக்கும். அப்பொழுது இதைப் படிப்பவரும் அடி வைக்கலாம்.

(8) மேன்மார்க்கத்தில் செல்பவனொருவன் ஒவ்வொரு விஷயத்தையும் தனக்குத் தானே ஆலோசித்து நிதானித்துக்கொள்ளப் பயிலவேண்டும்.

(9) இது நித்திய வஸ்து. இது அநித்ய வஸ்து என்று பகுத்தறியும் விவேகம் மனிதர்களை மேன்மார்க்கத்தில் பிரவேசிக்கச் செய்கிறது.

(10) இந்த விவேகமானது நம்முடைய அநுஷ்டானத்திற்கு வரவேண்டும். இம்மார்க்கப் பிரவேச முதல் முடிவு வரை, ஒவ்வொரு நாளும் அதன் ஒவ்வொரு படியிலும், இவ்விவேகம் நம்மநத்திலிருந்து நம்முடைய ஒழுக்கத்தைச் சீர்ப்படுத்தவேண்டும்.

(11) சாசுவதமும், ஸத்யமும், பெறுதற் கரியனவுமான விஷயங்கள் அம்மார்க்கத்தில் மாத்திரந்தான் அடையக் கூடியவைகளென்று நீ அறிந்திருக்கின்றமையால், அதில் நீ பிரவேசிக்கின்றாய்.

(12) நீ எவ்வளவு ஞானவானாயினும் இம்மேன் மார்க்கத்தில், நீ அறியவேண்டியது அதிகமிருக்கின்றது.

(13) "ஒரு மனிதன் முயற்சித்து ஸாதித்திருக்கிறதை மற்றொரு மனிதனும் ஸாதிக்கலாம்."

(14) உனக்கு மேன் மார்க்கத்தில் பிரவேசிக்க இஷ்டமிருந்தால், நீ செய்யும் காரியங்கள் என்ன பலன்களை விளைக்குமென்று நீ ஆலோசிக்கவேண்டும். இல்லாவிடில், யோசியாமல் நீ கொடும் பாதகங்களுக்கு உட்பட வேண்டிவரும்.

கே. யஸ். ராமச்சந்திர ஐயர்.